உ

கணபதி துணை

# வலிவலமும்மணிக்கோவை

(குறிப்புரையுடன்)

---

உலகத்தமிழ்க் கருத்தரங்கு மாலை
கலைக்காட்சிக் குழு
சென்னை

பதிப்பாசிரியர்:
மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி
டாக்டர் உ. வே. சாமிநாதையர்

சென்னை லா ஜர்னல் அச்சுக்கூடம்
மயிலாப்பூர்.

பவ௵ ஆனிமீ

1934

All rights reserved]

[விலை அணா 5.

4112
15FEB1975

OFFICE OF THE DIRECTOR OF ARCHAEOLOGY
4112
15 FEB 1975

உ

கணபதிதுணை

திருச்சிற்றம்பலம்.

"பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிவொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே."

திருச்சிற்றம்பலம்.

(திருஞான. தேவாரம்.)

தமிழ்மொழியின் நயங்களைப் புலப்படுத்தி விளங்கும் பல வகைப் பிரபந்தங்களுள் மும்மணிக்கோவை யென்பது ஒன்று. நவமணிகளுள் நிறங்கள் வேறுபட்ட புருடராகம், வைடூரியம், கோமேதகம் என்னும்* மூவகை மணிகளாற் கோக்கப் பெற்ற கோவையைப்போலவே தம்முள் வேறுபட்ட ஆசிரியப்பா, வெண்பா, கட்டளைக் கலித்துறை என்னும் மூவகைச் செய்யுட்கள் முப்பதால் அமைக்கப்படுவது அப்பிரபந்தம்; இந்த மூன்று வகைச் செய்யுளும் அந்தாதியாகியும் ஈற்றுச்செய்யுளின் இறுதியும் முதற்செய்யுளின் முதலும் ஒன்றுபட்டு மண்டலித்தும் அமைந்துவரும். வேறுவகையான அமைப்பையுடைய மும்மணிமாலை யென்னும் பிரபந்தம் ஒன்று உண்டு.

'கற்றதனால் ஆயபயன் வாலறிவன் நற்றாள் தொழுதலே' என்னும் உண்மையை உணர்ந்த தமிழ்ப்புலவர்கள் பலர் தம்மை அலங்கரித்துத் தம்மழகைப் பாராட்டாமல் வழிபடுகடவுளர் முதலியோரை அலங்கரித்து அவர் விசேடங்களை யறிந்து இன்புறும் கருத்துடையவர்கள்; அங்ஙனம் அலங்கரிக்கப்புக்கவர்கள், "துலங்காரங் கண்டசரந் தோள்வளைமற் றெல்லாம், அலங்கார மேயுனைப்போலாமோ" (தமிழ்விடுதூது) என்பதையறிந்து தமிழால் அலங்கரிக்கத் தொடங்கிப் பலவகைப் பிரபந்தங்களை இயற்றினர். பதினோராந் திருமுறையில் ஏழு மும்மணிக்கோவைகள் இருக்கின்றன. ஆதி குமரகுருபரமுனிவர் இரண்டு மும்மணிக் கோவை இயற்றியுள்ளனர்.

---

* "மும்மணியா வனசொன்ன புருடராகம், உறுவயிடூ ரியங்கோமே தகமே யென்றுங் கோதுவர்." திருவால. 25 : 22.

வேறு பல புலவர்கள் இயற்றிய மும்மணிக்கோவைகளும் பல உண்டு. இங்ஙனம் பலபுலவர்களால் தம் கருத்தை அமைக்கும் இடமாக அமைந்த மும்மணிக் கோவை சொற்றொடர் நிலைச்செய்யுளின் பாற் படும்; "இறுதி யெழுத்தும் சொல்லும் இடையிட்டுத் தொடுத்த செய்யுளந்தாதி விகற்பம், உதயணன் கதையும் கலியாண கதையும் பன்மணிமாலையும் மும்மணிக்கோவையும் என்னும் அவற்றட் கண்டுகொள்க" (யா. வி. சூ. 53, உரை) என்பதில் செய்யுளந்தா திக்கு மும்மணிக்கோவை உதாரணமாகக் காட்டப்பெற்றிருத்தல் காண்க.

இத்தகைய சிறு பிரபந்தங்கள் படிப்பவர்களுக்கு எளிதிற் பல கருத்துக்களையும் சொற்பொருட் சுவைகளையும் அன்பையும் புலப் படுத்தி ஆசிரியருடைய ஆற்றலை விளக்குகின்றன. தொடர்ந்து பயிலும் ஆற்றல் இல்லாத இளம்பருவத்தினருக்கு உரிய பாடபுத்த கங்களாக இவ்வகைப் பிரபந்தங்கள் பண்டைக் காலத்துத்தமிழ்ப் பள்ளிக்கூடங்களில் பயிற்றப்பட்டன; அதனால் இவை தமிழறிவு பெற்றார்க்கும் பெற விரும்புவார்க்கும் ஒருங்கே இன்பந்தருவன ஆகும்.

வலிவலமும்மணிக்கோவையென்பது, சோழநாட்டின்கண் மூவர் தேவாரத் திருப்பதிகங்களையும் பெற்ற சிறப்புடைய 'வலி வலம்' என்னும் திருத்தலத்திற் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள ஸ்ரீ மனத்துணைநாதர்மீது இயற்றப்பெற்றது; விநாயகர் காப்புச் செய்யுளோடு முப்பத்தொரு செய்யுட்கள் அடங்கியது. இதனை இயற்றிய ஆசிரியர் இன்னாரென்று தெரியவில்லை.

தேவாரத்தை ஓதத்தொடங்குவோர் யாவரும் முதலில் ஓதும், "பிடியதனுருவுமை" எனவரும் திருப்பாட்டு இத்தலத் தேவாரப் பதிகத்திலுள்ளதே. இத்தலத்தின் வேறு திருநாமங்கள் ஏகசக்கர புரம், கொன்றைவனம், வில்வவனம் முதலியன. இங்கே கோயில் கொண்டெழுந்தருளியுள்ள திருமாலுக்குரிய திருநாம மாகிய ஏகசக்கர நாராயணப்பெருமாளென்பது இத்திருப்பதியின் பெயரால் வந்ததென்று தோற்றுகின்றது. இவை இந்நூலுள் "ஏக சக்கர வெழினகர்க் கதிப" (4) எனவும், "கொன்றை வனத்தார்", "மன்றலங் கொன்றை வனத்துறை நாயக", "கானமி ரிதழிக் கானகத் திறைவ" (6,7,13) எனவும், "பல்லவம் பொதுளிய வில்லவன நாதன்" (4) எனவும் வந்துள்ளன. இங்கே எழுந் தருளியுள்ள சிவபெருமான் திருநாமமாகிய மனத்துணை நாதரென் பது இந்நூலிற் பலவிடங்களிற் பலவகையாக எடுத்துப்பாராட்டப் பெற்றுள்ளது. அம்பிகையின் திருநாமம் மாழையுண்கண்ணி, மாழை

யொண்கண்ணியென்பன; இவை, "மாழையுண் கண்ணி கேள்வநீ கேண்மோ", "நீளயின் மருட்டு மாழையுண் கண்ணி", "மாழையுண் கண்ணி மாதுமை", "மாழையொண் கண்ணி கேள்வன்" (1,4,7,10) என்று இந்நூலுள்ளும் "மாழையொண் கண்ணுமையை மணந்தானை வலிவலந்தனில் வந்துகண்டேனே" (சுந்தர. தே.) என்று தேவாரத்திலும் வந்துள்ளன.

முற்காலத்தில் இத்தலத்தில் மதிலும் அகழியும் இருந்தனவென்றும் அவற்றின் சின்னங்கள் இப்பொழுதும் காணப்படுகின்றனவென்றும் கூறுவர்; "வரைதிகழ்மதில் வலிவலம்", "வானணை மதில் வலிவலம்", "மலைமலி மதில் வலிவலம்" என்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும், "நெடுங்கொடி நுடங்கும், செம்பொற் புரிசையும்" (22) என்று இந்நூலாசிரியரும் கூறியது அம்மதிலையே போலும். "நிலஞ்சூழ் பரவை நிரைமல ரேந்தி, வலஞ்சூழ் வருஉம் வண்ண மேய்ப்பப், பொய்கைசூழ் வலிவலப் புகழ்நக ரமைந்தோய்" (25) என்பதில் அகழி கூறப்பட்டிருக்கிறது.

இந்நூலாசிரியர் பல பழந்தமிழ் நூல்களைக் கற்றுணர்ந்து அதனாற்பெற்ற அறிவினைச் சிவபிரானது புகழைப்பாடுதலிலேயே பயன்படுத்தும் தன்மையினர்; சங்கநூற் சொற்றொடர்களையும் கருத்துக்களையும் பழைய நூலுரைகளையும் மனங்கொண்டு அவற்றை உரிய இடங்களில் அமைத்துள்ளார்; சிவபிரான் திருவடியன்பும் அடியார்பால் ஓடியா நேயமும் உள்ளவர்; நன்மை தீமையாகிய இயல்புடையாரின் வாழ்க்கைநிகழ்ச்சிகளையும் நல்வினை தீவினைகளின் இயல்பையும் அவற்றால் விளையும் இன்பதுன்பங்களையும் நன்கறிந்தவர்; செல்வர்களுடைய இறுமாப்பை அறிந்து வருந்துபவர்; வறியநிலையால் வாடி அறத்தாறீட்டும் செல்வவாழ்வை விரும்புபவர்; மேன்மேலும் கற்றுச் சிறந்து சிவபிரான் திருவருட் புகழையே பாடவேண்டுமென்னும் பேராவலுடையவர்; திருநீறு, கண்டிகை, அஞ்செழுத்து, சைவநூல்கள் ஆகிய இவற்றிற் குறைவிலா அன்புடையவர்; அடியார் யாவராயினும் அவரைத் தேவரென்றே சேவடி தொழும் அன்புவேண்டுபவர்; சிவபிரான் அருளே துணையென இருப்பவர்; பாசத்தின் நீங்கும் ஆசையுடையவர்; சிவபிரானது முழுமுதற்றன்மையை உணர்ந்தவர்; தம்மை இழிந்தவராகக் கருதி இரங்கும் சீலமுடையவர்; மனம் ஒரு நிலையுற்று நிற்றலையும் அவாவுபவர். வேந்தர்வாழ்வு (10,13), தூராக்குழியாகிய வயிற்றுப் பிழைப்பின் பொருட்டுப் பலவகை இழிதொழில் புரிபவர் செயல்கள் (10), செல்வர்வாழ்வு, வறியோர் துன்பநிலை, அறிஞர் இலக்கணம், கல்லாமாக்கள் இயல்பு, போகபூமி வாழ்க்கை, தேவர் வாழ்க்கை,

மனிதர்வாழ்க்கை, நரகவேதனை (13) முதலியவற்றைப் பற்றிய செய்திகளை இவர் விரிவாகக் கூறியிருக்கின்றார். சிவபிரானது திருமணம் (1), திருவுருவம் (4,19), திருநடனம் (16), அம்பிகையின் திருவுருவம் (7) ஆகியவற்றை இவர் வருணிக்கும் பகுதிகள் அழகானவை. ஓயாப்பிறவி யொழிவதற்குப் பற்றுக்கோடாவன வலிவலப் பெருமான் திருவடிகளே (26) யென்றுணர்ந்த ஆசிரியர் அத்திருவடிகளை, 'தெளியாத யாவற்றையும் தெளிவிக்கும் தேற்றாங்கொட்டை' (9), 'குறையாத பிறவிக் கோடைதீர இன்பங்கூரும் நீழல்' (19), 'பெரிய திருக்கை மாற்றும் மருந்து (29), 'பிறவிப்பிணிக்கு மருந்து, கூற்றுவனுக்குக் கூற்று, வேதமாகிய வண்டினுக்கு விரிந்த மலர்' (30) என்று சிறப்பித்திருக்கிறார்.

மனத்துணைநாதரென்னும் திருநாமத்தை உட்கொண்டு இவ்வாசிரியர், 'நீ மனத்துணைநாதனாதலின் என் விருப்பத்தைச் சொல்வேன்' (1) என்றும், 'தீயசெயல்கள் பல அடியேன் செய்தேன்; யான் செய்யும் இச்செயலுக்குக் காரணம் எளியேன் மனமே; ஆயினும் அதற்கும் ஆதி நீ ஆதலின், இனிப்பொறுக்கமாட்டேன். என்செயலெல்லாம் நின்செயலென்றே சபையில் நின்று அலர் தூற்றுவேன்' (16) என்றும் கூறும்பகுதிகள் அறிந்து மகிழ்தற்குரியன. 'வேதத்திற்கும் பிறபொருள்கள் யாவற்றிற்கும் சேய்மையிலுள்ளவராக இருந்தும் என்மனத்தில் வந்து எழுந்தருளியவர்' (5) என்றும், "சிந்தையுஞ் செல்லா தாயினும் வந்தென, துள்ளத் துள்ளே யுள்ளூறி விளைந்த, துன்னரு ளமிழ்தே பின்னெவ னுளதோ, ஆதலின் மனத்துணை யாபவ னீயே" (22) என்றும் உள்ளபகுதிகளும் அத்திருநாமத்தின் பொருள்பற்றி எழுந்தனவே யாகும்; இக்கருத்தையே உளங்கொண்டு திருநாவுக்கரசு நாயனாரும் இத்தலத் திருத்தாண்டகத்தில் ஒவ்வொரு திருப்பாட்டிலும் சிவபிரான் பெருமையைப் பலபடப் பாராட்டி ஈற்றடியில், "வலிவலத்தான் காணவனென் மனத்துளானே" என்று திருவாய்மலர்ந்தருளினாரென்று தோற்றுகின்றது. இந்நூலுள் தலைவிகூற்றாகவும் (6), தோழிகூற்றாகவும் (14), நிந்தாத் துதியாகவும் (8) ஒவ்வொரு செய்யுள் உள்ளது. தலைவிகூற்றில், உள்ள, "கொன்றை வனத்தார் அத்தார் நல்க நோக்க மொன்றும் தந்திலர்" (6) என்பதின் தோன்றும், 'சரக்கொன்றை மலர் மிக்குள்ள இடத்திலிருப்பவர் ஒரு தாரைத் தரவில்லை' என்னும் குறிப்பும், 'என் விருப்பம இன்னதென்று தெரிந்திருந்தும் அருளவில்லை; இவரை மனத்துணையாரென்று சொல்லுதல் ஏன்?' என்று அத்தலைவிகூறுவதாக உள்ள குறிப்பும் நயம்பெற அமைந்துள்ளன. நல்வினை தீவினையென்னும் இரண்டையும் இரண்டு களிறாகவும்

உயிரைக் கட்டுத்தறியாகவும் உருவகம் செய்து அக்களிற்றின்பிணிப் பிலிருந்து தம்மை விடுவிக்கவேண்டுமென்று இறைவர்பால் முறை யிடுபவராகிய ஆசிரியர், "வாரண மடர்த்த காரணன் நீயே, ஆதலின் இதுமற் றம்ம நமக்கோ, அடாஅ தென்னப் படாஅ தன்றே" (13) என்றும் தம் மனத்தை அன்பினுற் குழையச்செய்ய வேண்டுமென்று வேண்டுபவர், "வடவரை குழைத்தோய்க், கயலா யென்மனம் குழைப்ப, தியலா தென்ப திறம்பூ துடைத்தே"(7) என்றும் சிவபிரா னுடைய பராக்கிரமச் செயல்களை எடுத்துக்காட்டிப் பிரார்த்திக் கின்றார். தம்பிழைகளைப் பொறுத்து ஆட்கொள்ள வேண்டுமென்று விரும்புபவர், "கல்லா லெறிந்த பொல்லாப் புத்தனும், செருப் பதைப் பணித்த பொருப்பிடைப் புளினனும், ஒருகா லன்றி யூடல் தீர, இருகா லிரவி லேவிய வொருவனும், பிழைத்தன பொறுத்தல் போல நாயேன், இழைத்த தீவினை யாவையும் பொறுத்து" (4) என்று சாக்கியநாயனர் முதலியோர் செய்த பிழைகளைச் சிவபிரான் பொறுத்தாண்டதை யெடுத்துக் காட்டுகின்றார். "உள்ளன போல வில்லன விசைப்பினும், நல்லன போலத் தீயன நவிற்றினும், புகழ்ந் தன போல விகழ்ந்தன வடியேன், உரைத்தன னாயினும் பொறுத்தி" (25) என்று வேண்டுதல் மனத்தை உருக்குகின்றது. சிவபிரான், "தினைத்துணை யன்பு செய்யினு மதனைப், பனைத்துணை யாக்கிப் பயன் கொடுத் தருள்வோன்" (10) என்பதை உணர்ந்த இவ்வாசிரியர் "மாசற மேற்கதி வழங்குதல் வேண்டும், அன்னது வழங்கா யாயினு நின்னடித், தாமரை தொழூஉந் தாவா நேயம், இன்னு மின்னு மதுவே யெய்தத், தருவது வேண்டும்" (28) என்று குறையிரத்தல் முத்திச் செல்வத்தினும் அன்பையே பெரிதாக நினைப்பவரென் பதைப் புலப்படுத்துகின்றது. இப்பகுதி, "தெண்ணிலா மலர்ந்த வேணியா யுன்றன் திருநடங் கும்பிடப் பெற்று, மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு வாலிதா மின்பமாம்", "கூடு மன்பினிற் கும்பிட லேயன்றி, வீடும் வேண்டா விறலின் விளங்கினர்" (பெரிய புராணம்), "ஆனபய பத்திவழி பாடுபெறு முத்தியது வாகநிகழ் பத்தசன வாரக் காரனும்" (திருவகுப்பு) என்னும் அருமைத்திரு வாக்குக்களை நினைவுறுத்தி இன்புறுத்துகின்றது.

உறுதியான இத்தகைய சிவபக்திச் செல்வமும் சிறந்த கல்வியும் இனிய செய்யுளியற்றும் ஆற்றலும் வாய்ந்த இந்நூலாசிரியருடைய வரலாறு ஒன்றும் தெரியவில்லையே என்னும் குறை மனத்தை வருத்து கிறது; எனினும் இந்நூலேனும் கிடைத்ததே யென்று எண்ணி ஆறுதலடைகிறேன்.

இந்நூலின் ஏட்டுச்சுவடி யொன்று, கும்பகோணம் காலேஜில் தமிழ்ப் பண்டிதராக இருந்த சி. தியாகராச செட்டியாரவர்களிடமிருந்து எனக்குக் கிடைத்தது. அது 150 வருடங்களுக்கு முன் எழுதப்பட்டதாகத் தோற்றுகிறது. பின்பு பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயரவர்களிடமிருந்து வேறொரு பிரதி கிடைத்தது. இரண்டிலும் 13-ஆவது செய்யுளின் இடையில் 72-ஆம் அடிக்குமேற்பட்ட சில அடிகள் காணப்படவில்லை. அப்பகுதிக்குரிய இடம் விடப்பட்டிருந்தது. ஆதலின் அப்பிரதிகளின் மூலப்பிரதி சிதைந்திருக்கலாமென்று தோற்றியது. இதனை ஏட்டிலிருந்து எழுதியுதவியவர் என் இளைய சகோதரர் சிரஞ்சீவி வே. சுந்தரேசையர்.

இதனை ஆராயுங்காலத்தும் பதிப்பிக்குங் காலத்தும் உடனிருந்து உதவிசெய்தவர்கள், சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் சிரஞ்சீவி வித்துவான் வி. மு. சுப்பிரமணிய ஐயரும், 'கலைமகள்' துணையாசிரியர் சிரஞ்சீவி வித்துவான் கி. வா. ஜகந்நாதையரும் ஆவார்கள். இவர்களுக்கு நல்வாழ்வு உண்டாகும்படி செய்வித்தருளும் வண்ணம் மனத்துணைநாதர் திருவருளைச் சிந்திக்கின்றேன்.

ஸ்ரீ வலிவல சம்பந்தமான சில செய்திகளை அத்தலத்திலுள்ள ஸ்ரீமான் மனத்துணைநாத தேசிகரவர்கள் விசாரித்து எனக்கு அன்புடன் உதவினார்கள்.

'கலைமகள்' வெளியீடாக இப்புத்தகம் வெளிவருதற்குக் காரணராக இருந்த அப்பத்திரிகையின் அதிபர் ஸ்ரீமான் ரா. நாராயணசாமி ஐயரவர்களுக்கும் பத்திரிகாசிரியர்களுக்கும் என்னுடைய நன்றி உரியதாகும். இது போன்ற வேறு பிரபந்தங்கள் வெளியிடும்படிக்கும் இவ்வுதவி என்னைத் தூண்டுகின்றது.

'தியாகராஜ விலாசம்'
திருவேட்டீசுவரம்பேட்டை,
12—6—34.

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்.

உ

கணபதி துணை

# வலிவலமும்மணிக்கோர்வை

## காப்பு

(வெண்பா)

**மா**மா துறையும் வலிவலத்து வாழ்வுகந்த
கோமான்மேன் மும்மணிக் கோவைக்கு—நாமாது
தும்பைச்செம் பொற்கொன்றைத் தொங்கற்சம் புத்தந்த
கம்பக்கும் பத்தும்பல் காப்பு.

## நூல்

(அகவல்)

1. பூவிரி கமல மேவரு பொகுட்டு
வட்டணை யிருந்த முட்டாச் செல்வத்து
வெண்ணரைக் குடுமிப் பண்ணவக் கிழவன்
சதுமறை முறையுளி வதுவைவினை தொடங்கத்
தாமரை பழித்த கைமருங் கமைய
அசும்பிருந் தொழுகும் பசும்பொ ஞணியாத்
தேழ்பெரும் புடவிப் பாலிகைப் பொலிந்து
நந்தா மரபிற் செந்தீ யோம்பப்
பசுந்துழா யணிந்த செங்கணெடு மாயோன்
வெண்பொரி யேந்தி யன்பொடு தூவ
அடர்பொற் சிரகங் கரமலர் தாங்கி

---

### குறிப்புரை

காப்பு. மாமாது - திருமகள். உம்பல் - யானை; என்றது விநாயகரை. நாமாதும் உம்பலும் காப்பு.

1. அடி. 2. வட்டணை—வட்ட அணை; வட்டமாகிய இருக்கை; (சீவக. 2433.) 3. கிழவன் - பிரமதேவர். 4. வதுவை வினை - கலியாணம். 6. பசும்பொன் நாண் யாத்து - பசிய பொற்கயிறு கட்டி; நாணென்றது காப்பு நாணை. 7. எழு பெரிய தீவாகிய பாலிகை விளங்காநிற்ப. 10. பொரி மங்கலப் பொருள்களுள் ஒன்று. 11. அடர் பொற் சிரகம்-தகட்டுப் பொன்னாற்

இமைய மாதுல னுதகம் வார்ப்ப
அமையா நோக்கி னிமையா நாட்டத்
தெல்லொளி வானவர் பல்லாண் டிசைப்பப்
பாயிருள் பருகிப் பகலெதி ரெடுக்கும்
ஆறிரு திறத்த அவிர்கதிர் மண்டிலம்
நந்தா விளக்க முந்துவந் தெடுப்ப
வடவரை முதல தடவரை நெடுங்கால்
விதானமந் தாகினி விண்கா வணத்தில்
இருவரு மும்முறை யெரிவலஞ் சூழ்ந்து
பொற்று மரையிற் பொலிந்தசெஞ் சீறடி
கற்று மரையெனக் கரங்கொடு கோலிச்
செம்பொற் சதங்கை சிலம்பொடு புலம்ப
அம்மிமிசை யேற்றிச் செம்மையி னிறுவி
வடதிசை யொருமீ னிருவரு நோக்கி
உலவாக் காத லுவட்டெடுத் தொழுக
மணவினை முற்றி மகிழ்தூங் குளத்தின்
இடப்பால் வைத்த விமய மாதுமை
மாழையுண் கண்ணி கேள்வநீ கேண்மோ
சுரிமுகப் பணிலஞ் சூலுளைந் தலறி
மரைமலர்ப் பழனத்து வயின்வயி னுயிர்த்த
பொழிகதிர் நித்திலம் புதுநில வெறிப்பச்
சேற்றிடைத் தவழுந் தோற்ற மூற்றிருந்
தாரமு துறைக்கும் பூரண மதியம்
நீனிற வானத்து மீனின மீளிரச்
செல்வது பொரூஉந் தொல்லியல் வழுவா
மல்லலஞ் செல்வ வலிவல மூதூர்

---

செய்த கமண்டலம்; "அடர்பொற் சிரகத்தால் வாக்கி" (கலி. 51 :7.) 12. இமையமாதுலன்—இமய அரசனாகிய மாமன். உதகம் - நீர். 14. எல் ஒளி - மிக்கவிளக்கத்தையுடைய. 15-6. எதிரெடுக்கும் - உமிழும்; ஆறிரு...மண்டிலம் - துவாதசாதித்தர். "அகலிரு விசும்பிற் பாயிருள் பருகிப், பகல்கான் றெழுதரு பல்கதிர்ப் பருதி" (பெரும்பாண். 1-2) 18. வடவரை—மேருமலை. கால்—தூண். 19. மந்தாகினி - ஆகாய கங்கை. காவணம் - பந்தல். "பந்தர் வானம் விதானமந் தாகினி" (பாசவதைப்பரணி, 156.) 22. கல் தாமரை யென—கல்லிலே முளைத்த தாமரை யென்று தோற்றும்படி, 22-4. கற்றுமரையென ஏற்றி. 25. வடதிசை ஒரு மீன்-அருந்ததி. 29. மாழை-ஒருவகை மான்; மாவடுவுமாம். மாழையுண் கண்ணி: இத்தலத்து அம்பிகையின் திருநாமம். 30. பணிலம் - சங்கு. 31. மரைமலர்ப் பழனம் - தாமரை

நண்ணிவாழ் மனத்துணை நாதனீ யாதலின்
யானென் றுணர்த்துவ துளதே யாதெனின்
வெண்ணகைச் செவ்வாய்ப் பைந்தொடி மகளிர்
கருங்கண் வலையிற் கட்டுண்டு கிடப்பினும்
ஆரா வியற்கை யவாமேற் கிளைப்பத்
தீரா வாசைத் திரைக்கட லழுந்தினும்
எண்ணில் கோடிப் பல்வகைச் சூழ்ச்சி
கணத்திடை யியற்றிக் கறங்கெனச் சுழலினும்
கரவு பூண்ட கையர் பாற்சென்
றிரவுபூண் டீகென வேக்கற்று நிற்பினும்
அந்தர வுலக மவனி யாக
இந்திர செல்வ மெய்திவீற் றிருப்பினும்
அத்திற னன்றி யனந்தபல் கோடி
எத்திற னெத்திற னிசையினு மென்மனம்
முண்டத் திலங்கும் வெண்டிரு நீறும்
எண்டகு சிறப்பிற் கண்டிகை மாலையும்
ஓதுமஞ் செழுத்தி னுண்மைநெஞ் சழுத்தும்
ஓடியா நேயமு முடையநின் னடியர்
யாவ ராயினு மாகயா னவரைத்
தேவ ரென்றே சேவடி தொழூஉம்
அன்புதந் தருளல் வேண்டும்
என்பெரு வரமு மிதுவலி தின்றே.

---

மலர் நிறைந்த வயல். 38. மனத்துணைநாதன்: இத்தலத்து எழுந்தருளியுள்ள சிவபெருமான் திருநாமம். 42. "ஆரா வியற்கை அவா நீப்பின்" (திருக்குறள், 370.) 45. கறங்கு - காற்றாடி. 52. முண்டம் - நெற்றி. 53. கண்டிகைமாலை - உருத்திராட்சமாலை.

கிழவன் (3) தொடங்கவும் (4) மாயோன் (9) தூவவும் (10) மாதுலன் வார்ப்பவும் (12) வானவர் இசைப்பவும் (14) மண்டிலம் (16) எடுப்பவும் (17) சூழ்ந்து (20) நிறுவி (24) நோக்கி (25) மணவினை முற்றி (27) வைத்த (28) மாழையுண் கேள்வ நீ கேண்மோ (29). யான் உணர்த்துவது உளது (39); கண்வலையிற் கிடப்பினும் (41) அழுந்தினும் (43) சுழலினும் (45) நிற்பினும் (47) இருப்பினும் (49) எத்திறன் இசையினும் (51) அடியர் யாவராயினுமாக அவரை யான் (55-6) தொழூஉம் (57) அன்பு (58) என்மனத்தில் (51) தந்தருளல் வேண்டும் (58) என வினைமுடிவு செய்க.

எத்தகைய நிலையி லிருப்பேனாயினும் தேவரீருடைய அன்பர்களைத் தொழும் அன்பு அடியேன் உள்ளத்தே இருக்க அருள வேண்டுமென்பது கருத்து.

பி-ம். 12. உதகம் பொழிய. 21. புரிந்தசெஞ் சீறடி.

(வேண்பா)

2. இன்றுசென்ற நின்றுசென்ற தென்றுநெடுங் காலமெல்லாம்
சென்றதன்றி யாதுநெஞ்சே செய்துகொண்டாய்-கன்றிக்
கலிவலத்தை யெய்தியே காயாம லீசன்
வலிவலத்தை யெய்தியே வாழ்த்து.

(கட்டளைக் கலித்துறை)

3. வாழ்வாய் மனத்துணை நாதனை வாழ்த்தி வலிவலமே
சூழ்வா யவற்குத் தொழும்புசெய் வாய்மும்மைத் துன்பவெள்ளத்
தாழ்வாய்வெங் காமச் சுறவேற்றி னேறுண் டலைந்தலைந்து
வீழ்வாய் மடநெஞ்ச மேயினி யாயினும் வீடெய்தவே.

(அகவல்)

4. எய்த வைங்கணைக் கைதவக் காமன்
வண்ண நுங்கிய கண்ணுதன் முதல்வ
பார்ப்பனச் சிறுவற் கருளுற் றிருந்து
கூற்றுயிர் குடித்த குரைகழ லிறைஞ்சு
மாளா திமையோர் வாரிவாய் மடுத்த
காள மாசின் வாளவிர் மிடற்ற
பலபே ரூழி பல்கினு முற்று
தொருநிலை நின்ற மதிமுகி ழுதனொடு
செந்தழல் வயின்வயின் வெண்பொரி மிளிர்ந்தெனத்
தும்பையம் போதலர் செஞ்சடைப் புனித
இருநிலம் பொதிந்த வொருபெரு நோன்றாள்
வண்டுழாய் முகுந்தனு முண்டகத் திறைவனும்
ஏனமு மன்னமு மாகி யாணு

---

2. இன்று - இந்தநாள். கலி-தீயதொழில்களுக்கு மூலமாகிய தெய்வம். வலத்தை - வெற்றியை.

3. மும்மைத் துன்பம் - தன்னால்வருவது, பிறரால் வருவது, தெய்வத்தால்வருவது. காமமாகிய ஆண் சுறவு; "தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத் தடந்திரையா லெற்றுண்டு பற்றொன் றின்றிக், கனியை நேர் துவர்வாயா ரென்னுங் காலாற் கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப் பட்டு" (திருவாசகம்.) வீடெய்த வாழ்த்தி வாழ்வாயாக.

4. 2. வண்ணம் - நிறம்; இங்கே உருவம். 3. பார்ப்பனச் சிறுவன் - மார்க்கண்டேயர். 5. இமையோர் மாளாது. 6. காளமாசின்வாள் - ஆலகால விஷக்கறுப்பின் ஒளி. 7-8. மதிமுகிழ்-பிறையாகிய அரும்பு; "கருமுடி வைத் தருகால கற்பமெலாம் கடக்கவுநின், திருமுடியிற் பிறை சிறிதும் தேயாது வளராதே" (திருவருணைக்கலம்பகம்.) 9-10. தும்பைக்குப் பொரியும் சடைக்குத்தழலும் உவமைகள். 11. பொதிந்த - மூடிய. நோன்றாள் -

திருதா ளாய வொருதாள் வனசமும்
வளர்சடைக் கானமும் வழிபிழைத் தவரென
எண்ணில் கால மண்ணகங் கிளைத்தும்
விண்ணகந் துருவி மேற்படக் கிளர்ந்தும்
காணா ராகி நாணமீ தூர
ஆதியு மந்தமு மளவையு மொரீஇச்
சோதி யாகித் தோன்றிய வொருவ
போக பூமி யாமெனச் சிறந்த
ஏக சக்கர வெழினகர்க் கதிப
சொல்லரும் பேரிசை நல்லவர் பழிச்சும்
பல்லவம் பொதுளிய வில்லவன நாத
நீளயின் மருட்டு மாழையுண் கண்ணி
கேள்வ னாகிய மீளியஞ் செல்வ
ஊழி யூழி யுலவாக் காட்சி
வாழி வாழி மனத்துணை நாதவென்
றன்னடிக் கமல மென்முடிச் சூட்டி
வேண்டுவ தொன்றுள தீண்டது வினவிற்
கல்லா லெறிந்த பொல்லாப் புத்தனும்
செருப்பதைப் பணித்த பொருப்பிடைப் புளிஞனும்
ஒருகா லன்றி யூடல் தீர
இருகா லிரவி லேவிய வொருவனும்
பிழைத்தன பொறுத்தல் போல நாயேன்
இழைத்த தீவினை யாவையும் பொறுத்து
நின்னடி யாருடை நெடுங்கணக்கின்
என்னையுங் கடைமுறை யெடுத்தெழு துவதே.

---

வன்மையை யுடைய திருவடி. 14. ஒருதாளென்றது வனசத்திற்கு அடை. 15. 'வழிபிழைத்தவரென' என்றது நெறியல்லா நெறியால் தேடியதைக் கருதி நின்றது ; இது, 'அன்னத்திற்குத் தாமரையும் பன்றிக்குக் காடுமாதலால்...இவ்வாறு தேடாது தமது அகங்காரத்தினால் மாறுபட்டுப் பன்றி தாமரையும் அன்னம் காடுமாகப் படர்ந்து தேடுதலாற் கண்டிலர்' (திருச்சிற்றம்பலக் கோவையார், 86, பேர்.) என்பதனால் விளங்கும். 19. ஒரீஇ - நீங்கி. 24. பல்லவம் - தளிர். வில்லவனம் - வில்வவனம். 25. அயில் - வேல். 31. புத்தன் - சாக்கிய நாயனார். 32. புளிஞன் - வேடன் ; கண்ணப்பநாயனார். 33-4. ஏவிய - பரவையாருக்குத் தூதாக ஏவிய. ஒருவன் - சுந்தரமூர்த்தி நாயனார். "நாவல னேவலி னேவலா ளாகி, ஒருமுறை யன்றி யிருமுறை நடந்து" (15) என்பர் பின். 37-8. "நின், தமர்பெய ரெழுதிய வரிநெடும் புத்தகத், தென்னையு மெழுத வேண்டுவன்" (கோயினான்மணிமாலை, 4.)

வேண்டுவது ஒன்றுளது ; அது (30) எடுத்தெழுதுவதே (38) என்க.

(வெண்பா)

5. எழுதாக் கிளவிக்கு மெய்ப்பொருட்குஞ் சேய்த்தாய்
முழுதாய்ப் பரந்தானு முற்றும்—கழிபோர்
நலிவலத்தா னாற்றினா னற்றுணைவன் காணா
வலிவலத்தா னென்மனத்தான் வந்து.

(கட்டளைக் கலித்துறை)

6. வந்தது மாலை புகுந்தது போது வடவைச்செந்தீக்
கொந்தது போலக் கொதித்தது திங்கட் கொழுந்துமனம்
நொந்தது கொன்றை வனத்தாரத் தார்நல்க நோக்கமொன்றும்
தந்தில ரென்கொன் மனத்துணை யாரென்று சாற்றுபவே.

(அகவல்)

7. வேயெனப் பணைத்த தோளு மாய்மயிற்
பெடையெனச் சிறந்த சாயலு மடமருள்
மானெனக் கிடந்த நோக்கமுந் தேனென
அமிழ்தூற் றிருக்கு மழலையங் குழலிசை
வண்டுபாட் டயருங் கொண்டையுந் தொண்டையஞ்
செவ்வாய் வனப்பு மூரல்வெண் முத்தும்
உற்பல மலர்ந்த வற்புதப் பதுமமும்
இடுகிடை யொல்க வடிபரந் தெழுந்து
கச்சு வீசிய முற்றா முலையும்
இலவல ரெள்ளிய நலனுடை யடியும்
ஓவியம் பெற்று மேவிய தன்ன
மாழையுண் கண்ணி மாதுமை பாக
கடன்மடை திறந்தெனக் கனைகடாஞ் செருக்கிய

---

5. எழுதாக்கிளவி - வேதம். கழிபோர் - மிக்க போரில். நலிவு அலத்தான் ஆற்றினான் நற்றுணைவன் - நலிவினைக் கலப்பையாற் செய்த பலராமனுக்குத் துணைவனாகிய கண்ணபிரான்.

6. போது புகுந்தது - சூரியன் மேல் கடலிற் புகுந்தான்; "போதா யினபோது" (கம்ப. சுந்தர.) கொன்றைவனத்தார்; கொன்றை இத்தல விருட்சம்.

7. 4-5. குழலிசை வண்டு: "குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட" (மணி. 4:3.) தொண்டை - கோவைக்கனி. 7. உற்பல மென்றது கண்களை; பதும மென்றது திருமுகத்தை; "முண்டகத்தின் மீது முழுநீலம் பூத்த தனைக், கண்ட துண்டு கேட்டதில்லை காண்" (தனிப்பாடல்.) 8. இடுகிடை - சுருங்கிய இடை. 10. பாதத்திற்கு இலவம்பூ உவமை: (சீவக. 1588, 1881.)

யானைமுக வவுணன் றனையொடு முடியச்
சிறுகட் டீயுமிழ் தறுகட் சீற்றத்
துறுகா லசைக்கு மடிசெவிப் பிள்ளையும்
அன்றிற் குன்றமு மாம்பன்முக வவுணனும்
முடங்குளை மடங்கன் முரண்முகத் தவுணனும்
தானவர் குழீஇய சேனையங் கடலும்
வேரொடு மடியச் சூர்முத றடிந்த
செவ்வேற் சேயுஞ் சேயெனப் படைத்த
மன்றலங் கொன்றை வனத்துறை நாயக
கலிவலந் தொலைச்சிய வலிவல முகந்து
மன்னிவீற் றிருக்கும் மனத்துணை நாத
வேதப் புரவி விரிஞ்சன் செலுத்த
முடங்குதிரைப் பரவைக் கிடங்கெனுங் கிடுகுடை
நெடுங்காற் புடவிக் கடுந்தே ரேறி
முப்புரங் கடந்த ஞான்று துப்புடன்
இருகால் வளைய வாங்கி யொருகால்
வரியுடற் கட்செவிப் புரிநாண் பிணித்துக்
குடுமி யாயிர வடவரை குழைத்தோய்க்
கயலா யென்மனங் குழைப்ப
தியலா தென்ப திறும்பூ துடைத்தே.

(வெண்பா)

8. உடையார் வலிவலஞ்சே ருன்மத்தர் பூதப்
படையா ரவர்பரிசு பாரீர்—கிடையாதோ
ஏறுவ தேறு மெடுப்பது பிச்சையாம்
கூறுவ தேறுங் குணம்.

---

14. யானைமுக அவுணன் - கயமுகாசுரன். 16. பிள்ளை - விநாயகர். 17. அன்றிற் குன்றம் - கிரவுஞ்சமலை. ஆம்பல் முக அவுணன் - தாருகன்; ஆம்பல் - யானை. 18. முடங்கு உளை - வளைந்த பிடரிமயிர். மடங்கல் முரண் முகத்தவன் - வலிபொருந்திய சிங்கமுகாசுரன். 26. கிடுகு - பலகை. 27. கால் - சக்கரம். 28. துப்பு - வன்மை. 29. இருகால் - வில்லின் இரண்டு நுனி; ஒருகால் - ஒருமுறை; "வரையன் றொருகா லிருகால் வளைய நிமிர்த்து" (திருச்சிற். 152.) 31. குடுமி - சிகரம். 31-3. இறும்பூது - ஆச்சரியம். "தெவ்வரை மெய்யெரி காய்சிலை யாண்டென்னை யாண்டுகொண்ட, செவ்வரை மேனியன்" (சிற். 114) என்பதும், 'என்னைத் தனக்கு அடிமை கொள்ளுதல் காரணமாகப் பிறிதொன்றின் மேலிட்டுக் கல்லை வளைத்தான்; என் நெஞ்சை வளைத்தல் காரணமாக அல்லது தனக்கு ஒரு பகையுண்டாய்ச் செய்த தன்றுபோலு மென்பது கருத்து' என்னும் அதன் விசேட உரையும், "கல்லை மென்கனி யாக்கும் விச்சைகொண் டென்னை நின்கழற் கன்பனாக்கினாய்" (திருவா.) என்பதும் இங்கே அறிதற்குரியன.

8. கிடையாதோ - அகப்பட மாட்டாதோ; உள்ளக்கிடக்கை யாதோ

(கட்டளைக் கலித்துறை)

9. தேறாத யாவுந் தெளிவிக்குந் தேறெனத் தேறிநின்று
கூறாத நூலிங்குக் கூறவுண் டோவெண்ணில் கோடிவிண்ணோர்
மாறாத வண்ணநஞ் சுண்டே வலிவலம் வாழ்வுகொண்டார்
ஆறாத செம்மை யரக்கூட்டி யன்ன வடித்தலமே.

(அகவல்)

10. அடித்தலம் படுத்தி யகனில முழுதும்
இசைமிகு செங்கோல் திசைதிசை யளப்ப
வெண்குடை நிழற்ற விரவலர் பணிய
ஆழியொன் றுருட்டி யரசுவீற் றிருக்கும்
பாழியந் தடந்தோட் படைவலி வேந்தரும்
அன்னவர் தலைத்தா ளணுகவு மஞ்சி
இன்னபோ திவ்வுழி யேவுமென் றறியாது
கடைக்கண் ணோக்கிற் கலந்தே கைவிரற்
புடைப்பெயர்வு நோக்கிப் போற்றுபு நின்று
சிறுகுற் றேவ னனிதவப் புரிந்தும்
கவிகை தாங்கியுங் காற்செருப் பெடுத்தும்
சிவிகை காவியுஞ் சேவடி வருடியும்
மிச்சிலூண் மிசைந்து மிச்சையி னிசைந்தும்
பிணப்பொதி சுமந்தும் பேரழ லட்டும்
மயிர்களைந் தொழுகியு மாசுடை யொலித்தும்
அன்னையு முடன்பிறந் தாளுந் தனையையும்
பின்னையு மனையவர் தம்முறை பிறழ
அவனி காண வல்லது புரிந்தும்
மறந்தே யாயினு மாநிலத் தெவர்க்கும்
இறந்தே யின்னுங் கியற்றுவ தறியாக்

---

வெனினும் ஆம். எறுவது எறும். குணம் கூறுவ தேறும் - குணங்களைக் கூறு தலைத் தெரியமாட்டோம்.

9. தேறு - தேற்றாங்கொட்டை; "மண்மயக்கந் தேற்றுவித்தான் மாற்று தல்போ லாரியனால், உண்மயக்கந் தேற்றுவித்தான்" (திருவேங்கடமாலை.) அடித்தலம் யாவும் தெளிவிக்கும் தேறு எனக் கூறாத நூல் உண்டோ என்க.

10. 1. படுத்தி - அடக்கி. 3. விரவலர் - பகைவர். 6. தலைத்தாள் - சமுகம். 8. நோக்கிற்கு அலந்து; அலந்து - ஏமாந்து. 12. காவியும் - சுமந்தும். 15. ஒலித்தும் - வெளுத்தும். 20. இன்னாங்கு - துன்பம்.

குறுமுய னெடுமோன் மறியின மயிலை
இன்னவை முதல தன்னளிக் குரியன
இனம்பிரிந் திரங்கி யிருகணீர் வாரா
அம்ம வோவென் றங்காந் தலற
ஞாளி கொண்டும் நாந்தகங் கொண்டும்
மீளி கொண்டும் விற்படை கொண்டும்
வலைமேற் கொண்டும் வன்க ணெய்திக்
கொலைமேற் கொண்டு கொடுந்தொழி லியற்றியும்
பிறன்சோர் பெண்ணிப் பின்விளை வெண்ணு
தறனழித் தயன்மனை யரும்பொருள் வெளவியும்
நடந்துசெல் வம்பலர் மடங்கிட நோக்கி
அடர்ந்து பின்றொடர்ந் தாறலை செய்தும்
இன்ன செய்பி னின்ன வாமெனப்
பன்னு மரபி னன்னவை பிறவும்
கைதூ வாது வைகலு மாற்றித்
தூரா வயிற்றுத் தொடுகுழி தூர்ப்பான்
நிச்ச நிரப்புறு மச்செயன் மாந்தரும்
வரிவளை யறையின் வாலரி யட்ட
புலியுகிர்ப் புழுக்கல் பொற்கலத் தேற்றி
இழுதில் வெந்த பழுதில்பல் காயம்
அமைத்தகுய் நறும்பொடி சுமத்துவ செய்த
வெருக்குக் கண்ணின் மேவரு பொரியல்
கறிச்சேறு கமழு மறுப்பருந் துவையல்

---

21. மயிலை - மீன். 25. ஞாளி - நாய். நாந்தகம் - வாள். 26. மீளி-உடல் வன்மை. 31. வம்பலர் - வழிச்செல்வோர். 32. ஆறலை - வழிப்பறி. 35. கைதூவாது - கை ஒழியாமல்; (புறநா. 334.) 36. தூரா வயிற்றுத் தொடு குழி : "தூராக் குழியைத் தூர்த்து" (திருவிடை மருதூர் மும்மணிக்கோவை, 7), "தூராச் சலதி தூரினுந் தூராப் படுகுழி யுதரம்" (மதுரைமும். 19.) 37. நிச்ச நிரப்பு - நித்திய தரித்திரம்; "அறிவினை, நிச்ச நிரப்புக் கொன் றாங்கு" (குறள். 532) 38. வரிவளை அறையின் வால் அரி அட்ட - வரியை யுடைய சங்கின் துண்டுகளைப்போன்ற வெள்ளிய அரிசியாற் சமைக்கப்பட்ட. 39. புலிஉகிர்ப் புழுக்கல் - புலி நகத்தைப்போன்ற சோறு; "பொற்கலத்துப் பெய்த புலியுகிர் வான்புழுக்கல்" (நாலடி. 206.) 40. இழுது - நெய். காயம் - கறிக்குச் சேர்க்கும் வாசனைப்பொருள்கள். 41. குய்நறும் பொடி - தாளிப்பிற்குரிய பொடி. 42. வெருக்கு.........பொரியல் - காட்டுப் பூனையின் கண்ணைப் போன்றுள்ள விரும்பத்தக்க பொரிக்கறிகள்; "வெருக்குக்கண் வெங் கருனை" (நாலடி. 210.) 43. கறிச்சேறு - மிளகின்பொடியாலாகிய இழுது.

இனையசிற் றுண்டி யிடையிடை சேர்த்தி
முனைதலி னறுநெய் முறைமுறை வார்ந்து
பெருகுதொறும் பெருகுதொறு மருகுசேர்த் தமைத்த
வளைமுறி வெள்ளயிர் வரம்பு கோலிக்
குயவரி யடியுறழ் கொடும்புறத் தீங்கனி
சுடுபொன் னன்ன படுசுளைப் பனசம்
தேன்றிரண் டனைய வான்சுவை மாங்கனி
வெண்மை குன்று வண்மைத் தாகப்
பாலுலை யாக்கிய வாலிய தோரியுடன்
அமிழ்துகுழைத் தாங்குத் தமிழ்பெற மயக்கி
இவ்வகை யடிசில் கைவயி னேந்தி
உண்ணென விரப்பினு முடன்பட் டுண்ணு
வேழத் தன்ன தாழாச் செல்வரும்
எடுத்தய லெறியு மெச்சிற் கிமையா
தடுத்திடு ஞமலியி னவாமீ தூர
எத்திறத் தடிசி லென்பதுந் தேறு
தத்திற நாடி யார்வமுற் றேடியும்
மைந்தரைப் பகர்ந்து மனைவியை நொடுத்தும்
தந்தமை விற்றுந் தம்பசி தணித்தும்
வாயதச் சிறையின் மாசுண்டு பிதிர்ந்து
வேற்றிழை நுழைந்தும் வெள்ளிடைத் தாகிக்
கடித்தல மன்றிக் காப்பதை யறியா
மடித்தல மொருகை வைத்துமற் றொருகை
அடகின் மீதுவைத் தண்ணுந் துறீஇ
உப்பிலிப் புற்கைக் குதவி யாகக்

---

45. முனைதல் இல் - வெறுத்தலில்லாத. 47. வளைமுறி வெள் அயிர் - சங்கின் துண்டுகளைப்போன்ற வெள்ளிய கற்கண்டுக்கட்டிகள். 48. புலியின் அடியைப்போன்ற வளைந்த முதுகையுடைய இனிய வாழைக் கனி; "கடுங்க ணுழுவை யடிபோல வாழைக், கொடுங்காய் குலை தொறூஉந் தூங்கும்" (கலி. 43: 24-5), "வெம்புலி யடிய பைங்காய்க், கோழரையரம்பை" (நைடதம். சுயம்வர. 159), "தாக்குத்தாட்பைங்காய்க் குலை" (தனியூர்ப்புராணம், நாடு. 16.) 49. பனசம் - பலாக்கனி. 52. வாலிய - வெள்ளிய. தோரி - அரிசி. 53. தமிழ்-இனிமை. 57-8. "நாய் பிறர், எச்சிற் கிமையாது பார்த்திருக்கும்" (நாலடி. 345.) 61. பகர்தல், நொடுத்தல்-விற்றல். 63. வாயதச்சிறையின் - காக்கையின் இறகைப்போல. 64. "வேற்றிழை நுழைந்த துன்னற் சிதாஅர்" (பொருந. 80-81), "வேற்றிழை நுழைந்தவேர் நனைசிதாஅர்" (புறநா. 69: 3) 67. அடகு-இலை; "காரடகின் மேல்வைத்தாள் கை" (பு.வே.) 68. உப்பிலிப்புற்கை - உப்பில்லாத புல்லரிசிக்கூழ்; "உப்பிலிப் புற்கை" (நாலடி. 206), "உப்பிலிப்புற்கை யுண்கமா கொற்கை யோனே"

கண்ணுறை பெறுது பண்ணற வட்டு
மருங்குசேர் சிதவற் கருங்கலத் திட்டு
விரிசுடர் குவிக்கு மின்மினி விளக்கின்
எரிபசி யகல வெடுத்தெடுத் தருந்தியும்
அவ்வகை யன்றி யழிபசி தீர
எவ்வகை யானு முய்வகை நோக்கிக்
கால மூன்றினுங் கண்பட லின்றி
ஞாலத் துழலு நல்குர வாளரும்
பார்ப்பன வாகை சூடி மேற்படு
கல்வி நீள்கடற் கெல்லை யாகி
ஒழுக்கமும் விழுப்பமு மழுக்க றுமையும்
தானமுந் தவமு மானமும் பொறையும்
தூய்மையு மின்சொலும் வாய்மையு நிறையும்
உடைய ராகிய தடையி லறிஞரும்
விடருந் தூர்த்தரு நடருமுள் ளிட்ட
சிற்றினந் தழீஇத் தீத்தொழில் பயின்று
கொண்டது விடாது கொடிற்றியல் பெய்தி
இம்மையு மறுமையு மெவையு மில்லென
அறிவறை போகிய நெறியறு மனத்துப்
பொல்லா தல்லது கல்லா மாக்களும்
இனைய வன்றியு நினைவருந் திறத்து
மாறுமா றாகிய வேறுவே றியல்பின்
ஒருவரை யொருவ ரொவ்வா ராகி
உயர்ந்துந் தாழ்ந்து முற்றோ ரனைவரும்
என்ன காரணத் திசைந்தன ரென்ன
முன்னை யேது முடிந்ததை வினவின்

(பழம்பாடல்.) 69. கண்ணுறை - மேலீடு. 70. இடையிற் சேர்ந்த கந்தல் துணியாகிய கருங்கலத்தில் இட்டு; வேறு உண்கலம் இல்லை யாதலின் அத்துணியே உண்கலமாயிற்று; சிதவல் - கந்தை. 73. அழிபசி - மிக்க பசி. 77. பார்ப்பனவாகை: (பு. வெ. 163.) 78. கல்விநீள்கடல்: "கல்வி யென்னும்பல்கடல்" (திருவா.) 79. அழுக்கறுமை - பொறாமை. 83. விடர் - தீயநடையையுடைய காமுகர். தூர்த்தர் - பரத்தையை நுகருங் காமுகர். 83-4. "சிற்றினமாவது...விடரும் தூர்த்தரும் நடருமுள்ளிட்ட குழு" (குறள் 46-ஆம் அதிகாரம், அவதாரிகை. பரிமேல்.); "விடருந் தூர்த்தரும் விட்டேற்றாளரும்" (மணிமேகலை, 14 : 61.) 85. கொடிறு - குறடு; "கொடிறும் பேதையும் கொண்டது விடா" (திருவா.) 87. அறிவு அறைபோகிய - அறிவு இல்லையாகிய; அறைபோதல் - ஒட்டையாதல். 94. முன்னை ஏது - பழவினை

கேளினி வாழி கெடுகநின் கவலை
அடையலர்க் கரிய னடியவர்க் கெளியன்
முடிவு முதலு மூர்த்தமு மில்லோன்
பிறப்பற வெறியு மறப்போர் வழ்க்கையன்
சிறப்புடை யெவரினுஞ் சிறந்த மேலோன்
நிரந்தர னிராமய னிரஞ்சன னிராகுலன்
வரந்தரு பவர்க்கும் வரந்தரு வானவன்
அரியதி னரிய னணுவினுக் கணுவாய்ப்
பெரியதிற் பெரிய னாகிய பெற்றியன்
தினைத்துணை யன்பு செய்யினு மதனைப்
பனைத்துணை யாக்கிப் பயன்கொடுத் தருள்வோன்
அணிதார் பொருது மகன்மார் புழக்கியும்
சிறையரி வன்பகை தீர்ப்பது செய்வான்
முலையென வருமிரு முரட்குவடு சுமந்த
பொற்றொடிப் புலோமசை நற்றளிர்ச் செங்கைப்
பைஞ்சிறைக் கிள்ளையுந் தஞ்செனப் பணிந்து
விண்ணவர் பழிச்சு மண்ணல் யானையும்
கோதவு முரிப்பவுந் தாற்றிடைப் பழுத்த
அரம்பையுங் கரும்பு மொருங்குவிண் ணளாவும்
அள்ளற் பழன மருகுசூழ் கிடந்த
மல்லற் செல்வ வலிவல முகந்தோன்
மாழையொண் கண்ணி கேள்வன் யாளி
அதளுடை யொருவன் மதவரை யடர்த்தோன்
தனைத்துணை யென்றே தாண்மலர் வழுத்துநர்
மனத்துணை யாகிய வானவன் பதயுகம்
வணங்குநர் வணங்கா ரென்ப
நுணங்கிய கேள்வி நுனித்தமே லவரே.

---

யாகிய காரணம். 97. மூர்த்தம்-திருஉருவம். 106-8. அணிதார் - இந்திரன் அணிந்த மார்பின்மாலை; வகுக்கப்பட்ட முன்படையென்பது மற்றொரு பொருள். முரண் - வன்மை. 109. புலோமசை - இந்திராணி. 110-12. தஞ்சு - தஞ்சம். யானை-ஐராவதம். கிள்ளை கோத அரம்பையும் யானை முரிப்பக்கரும்பும் என நிரல்நிறையாகக்கொள்க. 114. அள்ளல்-சேறு. 116-7. யாளி அதள் - சிங்கத்தோல்; "சிங்கத்துரி மூடுதிர் தேவர்கணம் தொழநிற்றிர்" (சுந்தர. தே.) மதவரை - யானை.

உயர்ந்துந் தாழ்ந்தும் உற்றோரனைவரினும் (92) வணங்குநர் உயர்ந்தற்றோரென்றும் வணங்கார் தாழ்ந்தற்றோரென்றும் கொள்க.

(வெண்பா)

11. மேலைத் தவமினியென் வெண்ணீ றிட் டஞ்செழுத்தாற்
காலைக் கடன்கழித்துக் கண்ணுதலான்—நூலையே
வாசிப்பா மெந்தை வலிவலத்தை யேவாழ்த்தி
நேசிப்பாம் வந்திப்பா நின்று.

(கட்டளைக் கலித்துறை)

12. நிற்பன செல்வன யாவையு மாயிந் நிலவுலகிற்
கற்பன கேட்பன வெல்லாங் கழித்துக் கடைமுறைக்கே
சொற்பன மாயின கண்டேன் வலிவலத் தொன்னகர்வாழ்
விற்பன னேயினி நின்னருளே துணை வேறிலையே.

(அகவல்)

(அரச வாழ்க்கை)

13. இலைத்தொழிற் பைம்பூ ணேந்திய முலைத்தடம்
சுமக்க லாற்றாது துளங்குபு நுழைநுசுப்
பிறமிற மென்றாங் கினவளை யேங்க
அஞ்சி லோதித் துஞ்சுபு கிடந்த
பொறிவண் டெழுந்து பொம்மென விரங்க
வதனபுண் டரிகத்து வனப்பு நோக்கிக்
கதுமென முகமதி கதிர்க்கரம் விரித்தாங்
கோவிய மனைய பாவையர் களித்து
வீழிவா யரும்பி யேழிசை முகிழ்ப்ப
வாழி பாடி யூழ்முறை யோச்சி
அம்பொற் காம்பின் மணித்தலை யவிழ்ந்த

---

இந்தச்செய்யுளோடு மதுரை மும்மணிக்கோவையின் 7-ஆவது செய்யுள் ஒப்பு நோக்கற்பாலது.

பி-ம். 17. பின்னு மனையவர். 39. பொற்கலத்தேந்தி. 52. வாலவிழ்தோரி.

11. மேலைத்தவம் இனி என் - இவற்றிற்கு மேற்பட்ட தவம் வேறு என்ன உண்டு?

12. சொற்பனம்: "சொற்பன மோவென்ன வற்புதமோ" திருவாவடுதுறைக் கோவை, 34.

13. 2. துளங்குபு-அசைந்து. 4. அம் சில் ஓதி - அழகிய சிலவாகிய கூந்தலில். 5. வண்டு எழுந்து பொம்மென இரங்க: "பொம்மென்ன வண்டலம்பும் புரிகுழலை" (கம்ப. கார்முகப். 22.) 6. வதனபுண்டரிகமென்றது அரசர் முகத்தை. 6-7. இல்பொருளுவமை. 9. வீழிவாய் - வீழிப்பழத்தைப்

உபய சாமரை புடைநின் றிரட்ட
மருங்குநின் றொதுங்கி மணிக்குழை கிழிக்கும்
கருங்கயற் கண்ணியர் வெள்ளடை யுதவப்
பைம்புயல் பொரூஉம் வம்பவிழ் கோதையர்
அம்புயப் பொகுட்டி னங்கைத் தாங்கி
வனமுலை வள்ள மன்றி வாய்மாற்
றமிழ்பொலன் வள்ள முவந்தன ரேந்தத்
தகர வார்குழற் றையல ரொருபால்
மகரயா ழமுதஞ் செவிவாய் மடுப்பக்
கற்பகக் கொம்பர் பொற்புடை யரங்கில்
நாடகம் புரிந்தெனப் பாடகச் சீறடி
அரிவையர் சதிமுறை நடிப்பச் சொரிதரு
நவமணி ராசியுந் தமனியக் குவையும்
திறையென வளந்து செருவிக லரசர்
மணிமுடி யிறைஞ்சி யிணையடி வழுத்த
ஒருதனிச் செங்கோ லிருநில மளப்ப
வெண்குடை கருங்கடன் மேதினி நிழற்றச்
சிங்கஞ் சுமந்த பைம்பொற் றவிசின்
வீற்றினி திருக்கு மாற்றருந் துப்பின்
வாகைவேந்தர் வாழ்க்கையு மதாஅன்று

(போகபூமி வாழ்க்கை)

பன்னீ ராட்டைக் கன்னிமங் கையரும்
பதினா றாட்டை யதிர்கழற் குமரரும்
இச்சையி னிசைந்தன துய்த்தனர் களித்துப்
பொன்னணிந் திலங்கு நன்னர்மா டத்தும்
மின்னவிர் சோதி வெள்ளிமண் டபத்தும்
விளிம்புபளிங் கியாத்த பசும்பொன்மே டையினும்
ஆடகக் குன்றினு நாடக வரங்கினும்
அரமியத் தலத்தினு முரவுநீர்த் தரங்க

---

போன்றவாய். 14. வெள்ளடை - வெற்றிலை. 16-8. தாமரைமலர் கைக்குழ் அதன்பொருட்டு பொற்கிண்ணத்துக்கும் உவமை. வாய்மாற்றென்றது, இங்கே, உமிழும் தம்பலத்தை. பொலன்வள்ளமென்றது படிக்கத்தை. 19. தகரம் - மயிர்ச்சாந்து. 20. மகரயாழ் - மகரவீணை. 23. சதி - தாள ஒற்று. 24. ராசி-கூட்டம். தமனியக்குவை - பொற்குவியல். 25-6. அரசர் வழுத்த. 30. துப்பு-வலி. 31. அதாஅன்று - அதனை அன்றி. 39. அரமியம் - நிலாமுற்றம்.

வாவியங் கரையினும் பூவியன் பொதும்பினும்
சந்தனக் காவினு நந்தன வனத்தினும்
பாடலு மாடலும் பயின்றன ரிகலி
ஊடலு முணர்த்தலுங் கூடலு நயந்து
புணர்தொறும் புணர்தொறும் புதிதுபுதி தாக
வணர்கருங் கூந்தல் வனிதையர் நலத்தின்
அன்பு மற்றை யின்புமீ தூர
எண்ணில் காலஞ் செல்லினுந் தத்தம்
வண்ணஞ் செல்லா மாண்பின ராகி
நொடிவரை யென்பதை யென்னை பின்னைத்
துடிபல வகுத்த பொழுதிடைப் படாஅ
தானுது நுகரு மானுச் செல்வப்
போக பூமிப் போகமு மதாஅன்

(வேறு நல்வாழ்க்கைகள்)

றுலகுடன் விளக்கு மிலகொளி மண்டிலத்
தாறிரண் டருக்கர் வீறுபெறு திருவும்
மருத்துவர் நிலையும் வசுக்கள் வாழ்க்கையும்
உருத்திர ருலகமு மொளிமதித் தோற்றமும்
அங்கி யாற்றலு மந்தக ளுட்சியும்
நிருதியி னியதியு நெடும்புன லதிபன்
மாயாச் சிறப்பும் வாயு வாழ்க்கையும்
வெறுக்கைக் கிழவன் மேதகு செல்வமும்
ஈச னியற்கையு மாசுடைத் துயர்ந்த
உருப்பசி திலோத்தமை கருப்புரச் செவ்வாய்

---

உரவுநீர்-உலாவுகின்றநீர். 40. பொதும்பு-மரச்செறிவு. 50. துடி-மிகச்சிறிதாகிய காலஅளவு. பொழுது இடைப்படாஅது-பொழுது இடையே வீண்போகாமல்; "காலையும் பகலுங் கையறு மாலையும், ஊர்துஞ்சி யாமமும் விடியலு மென்றிப், பொழுதிடை தெரியிற் பொய்யே காமம்" (குறுந்.) 51. மானு - ஒப்பில்லாத. 32-52. போகபூமிப்போகம், "பதினாறாட்டைக் குமானும் விதிவழிப், பன்னீராட்டைக் குமரியு மாகி, ஒத்த வன்பினு மொத்த நலத்தினும், கற்பக நன்மா நற்பய னுதவ, ஆகிய செய்தவத் தளவு மவ்வழிப், போக நுகர்வது போக பூமி" என்னும் திவாகரச் சூத்திரத்தால் விளங்கும். 54. சூரியர்பதவியும். 55. மருத்துவர் - அசுவினிதேவர். 57. அங்கி - அக்கினி. அந்தகன் - யமன். 58. நெடும்புனலதிபன் - வருணன். 60. வெறுக்கைக் கிழவன் - குபேரன்; வெறுக்கை - திரவியம்; "வெறுக்கைக் கிழவன் மகளென்ன விருந்து செய்தான்" (சீவக. 1871.) 61. ஈசன் - ஈசானனென்னும் திக்குப்பாலகன். மாசு உடைத்து - குற்றத்தை நீக்கி. 62. கருப்புரச்செவ்வாய் - கருப்பூரம் கமழ்

அரம்பை மேனகை யாங்கவர் மேலோர்
செய்தகுற் றேவ லெய்தின ரியற்றச்
சுரபியு மணியு நவநிதி ராசியும்
விரவின துவன்றி வேண்டுவ வேண்டுவ
கடைக்கட் குறிப்பிற் கதுமெனப் போற்றி
இடைப்பட லின்றி யேவல் கேட்ப
விண்ணவர் மகுட பந்தியி னிபுடம்
எண்ணிட விடனு மில்லெனக் குழுமி
முடித்தல மிறைஞ்சி யடித்தல முரிஞ்ச
நான்மருப் பியானை வான்பிட ரேறி
*...............................................................
...............................................................
.............................. நற்பால் வினையும்
...............................................................
...............................................................
...................... வெயிலின் வெம்மையும் ......

(மனித வாழ்க்கை)

கருக்குழி யழுந்தலும் பிறப்புடைத் துன்பமும்
சிறுஅர்ப் பருவத் தறுஅப் புன்கணும்
காமக் கவலையுங் கையற் றினைதலும்
நாமநீர்க் கடலிடை நாவாய்ச் சேறலும்
உடற்றுவெம் பசியு மடக்கருஞ் சினமும்
நரைவரு தீமையுந் திரைவரு மிகழ்ச்சியும்
வாயி லிழிபு மனத்தடு மாற்றமும்
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்தெற லொருவன்
பிணிக்குங் காலைப் பெயர்ப்பருந் துன்பமும்

---

கின்ற சிவந்தவாய். 63. அரம்பை - தேவகணிகையருள் ஒருத்தி. ஆங்கவர்; ஒருசொல்நீர்மையன; எழுவாய். 65. சுரபி - காமதேனு. மணி - சிந்தாமணி. நவநிதிராசி - ஒன்பது வடிவமுள்ள நிதிகளின் கூட்டம். 69. மகுடபந்தியின் நிபுடம் - முடிவரிசையின் நெருக்கம்; நிபுடம் - நெருக்கம்; "போரா நிபுட மாலை" (தக்க. 106.) 70. எண் - எள்; "எண்ணிட மின்றி மன்ன ரிம்மலை யிறைகொண் டீண்டி" (சீவக. 538.) 72. "பெருங்கை யானை யிரும்பிடர்த் தலை யிருந்து" (புறநா. 3:11.)

*இங்கே சிலஅடிகளும் சிலஅடிகளின் பகுதியும் கையெழுத்துப் பிரதிகளிலேயே காணப்படவில்லை.

77. கையற்று - செயலற்று. 81. வாயில் - ஐம்பொறிகள்; "பொறிவாயி லைந்தவித்தான்" (குறள், 6.) 82. கணிச்சி - மழுவாயுதம். ஒருவன் - யமன். 82-3. "கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்தெற லொருவன், பிணிக்குங் காலை

(நரக வேதனை)

போதுங் காலை யாதனை யனைத்தும்
நிரய வுலக நெறிகடந் தடைந்தபின்
கும்பி பாகமுங் கோரமும் வெம்பி
அடல்செய் ரவுரவ மாங்கது முளப்பட
அள்ளியிட் டனைய முள்ளுடை யிலவம்
தழீஇ யேறுந் தாங்கரும் பீழையும்
தாரை யொள்வாள் சக்கரந் தாங்க
விழுந்து மெழுந்தும் விரைந்தனர் நடந்தும்
வீயா தழலும் விழுமமுங் காய்ழற்
பகுவாய் வெம்புலி பாய்தொறும் பாய்தொறும்
குதுகுதுப் பெய்திக் குலைகுலைந் தஞ்சலும்
பொடித்தசெந் நெருப்பினும் வறுத்தவெண் மணலினும்
காய்ந்தவெந் நீரினுங் கனற்றிய நெய்யினும்
செப்புவட் டுருக்கிய தீயவெங் களியினும்
பங்க மலவலை பொங்கிய வுவர்நீர்
இடக்க ரீளை கடக்கரு முழுத்தசை
சோரி யின்ன வாரிபெய் கூவலிற்
கழுகின்வட் டத்துங் காகவட் டத்தும்
மசகவட் டத்து மீயின்வட் டத்தும்
பொறுப்பரி தாய துறப்பருந் துயரமும்
மாட்டுசெந் திகளின் வசியறைந் தெறியும்
கோட்டரும் பீடையிற் குரங்குபு கிடத்தலும்
காவலி னொரீஇக் கான்மேற் பிணித்து

---

யிரங்குவிர் மாதோ" (புறநா. 195.) 84. போதும்காலை - நரகத்துக்குச் செல்லுங் காலத்தில். யாதனை - துன்பம்; யாதனைத்துன்பத்தை, சிவதருமோத்திரம், சுவர்க்க நரகவியல், 43-ஆம் திருவிருத்தம் முதலியவற்றால் உணர்க. 86-7. கும்பிபாகம் முதலியன நரகவகைகள். 88. இலவம் - இலவமரம்; "வயிரமுண் ணிரைத்து நீண்ட வார்சினை யிலவ மேற்றி" (சீவக. 2766.) 90. தாரை - கூர்மை. 92. வீயாது - நீங்காமல். 94. குதுகுதுப்பு - நடுக்கம். 97. செப்புவட்டு - செம்பின் உருண்டை. களி - குழம்பியநீர்; "செம்புருகு வெங்களிக ளுமிழ்வ" (சீவக. 103.) 98. அலை - அலையையுடையநீர். 99. இடக்கர் ஈளை - மறைத்துச் சொல்லப்படுவதாகிய கோழை. 100. இன்ன வாரி - இவைபோன்ற நீர். கூவல் - கிணறு. 102. மசகம் - கொசுகு. 100-102. கழுகின் வட்டமுதலியன நரகவிசேடங்கள். 104. வசி - சூலம். 105. கோள்தரும். குரங்குபு - வளைந்து. 106. ஒரீஇ -

வாவலிற் றூங்கும் வான்கழி துன்பமும்
இனைய மாலைய நினைவரு மிடும்பை
தொடாஅ தல்லது விடாஅ வென்னும்
பார்ப்பார்த் தப்புதன் முதலிய பகுதித்
தீப்பால் வினையு மாகிய திறத்த

(இருவினை இயல்பு)

கழைசுளி தறுகட் கடாஅ யானை
இரண்டென துயிர்வெளி லொன்றிடை பிணித்தலும்
ஒன்றே மேன்மே லூக்குவ தொன்றே
கீழ்கீ ழூக்குவ தாதலின் மன்னே
படுமழை தலைஇய பானாட் கங்குலின்
இடுதிரைப் பௌவத் திடைப்புக் கழுந்தும்
கட்பொறி கதுவா துட்பொறி மயங்கிய
அற்புத வூமன் போலமற் றளியேன்
புலம்புகொண் டழுங்கி யிரங்கா வண்ணம்

(வேண்டுகோள்)

வால்வளைக் குலங்கள் வயிறுளைந் தலறிச்
சூன்முதிர்ந் துயிர்த்த சோதிவெண் ணித்திலம்
அம்பொற் றகட்டகட் டாடகப் பொகுட்டுப்
பைம்பொற் கமலப் பாயல்கொண் டுவந்து
கருவென வயிர்த்துக் குருகடை கிடக்கும்
வயல்விளிம் புடுத்த வலிவல் மூதூர்

---

நீக்கி. 107. வாவலின் - வௌவாலைப்போல. வான்கழி - மிகப்பெரிய. 108. மாலைய - இயல்பையுடைய. 110. பார்ப்பார்த் தப்புதல் - பார்ப்பாரைக் கொல்லல்; "பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்" புறநா. 34: 3.

நற்பால் வினையும் (73) தீப்பால்வினையுமாகிய திறத்த (111) வென இயைக்க.

112. கழை - குத்துக்கோல். 113. உயிர்வெளில் - உயிராகிய தம்பம்; வெளில் - யானையைக் கட்டும் தூண். 114. மேன்மேல் ஊக்குவது நல்வினை. 115. கீழ் கீழூக்குவது தீவினை. 116. தலைஇய - பெய்துவிட்ட. 118. கட்பொறி - கண்ணாகிய இந்திரியம். உட்பொறி - அறிவு. 116-9. "மாரி யிரவின் மரங்கவிழ் பொழுதின், ஆரஞ ருற்ற நெஞ்சமொ டொராங்குக், கண்ணி லூமன் கடற் பட் டாங்கு" (புறநா. 238 : 14-6) என்பது இங்கே ஒப்பு நோக்கற்பாலது. 122. நித்திலம் - முத்தை. 123. தகட்டு அகட்டு - தகட்டின் நடுவில். 125. அயிர்த்து - சந்தேகித்து. 122-5. நித்திலத்தை அயிர்த்துக் குருகு அடை

தழையவந் தருளிய தண்டாச் செல்வ!
வானவர் தலைவ! மனத்துணை நாத!
கானம ரிதழிக் கானகத் திறைவ!
மால்விடைப் பாக! மதியுடைப் பாக!
சேல்விழி யிமயத் திருந்திழை பாக!
வாரண மடர்த்த காரணன் நீயே
ஆதலி னிதுமற் றம்ம நமக்கோ
அடாஅ தென்னப் படாஅ தன்றே
காய்சினந் திருகிக் கடாங்கவிழ் வேழத்
துகளம் பிணித்த நிகளமுந் துகள்படத்
துடக்கிற் சிமிழ்த்த விடற்கரும் பிணிப்புன்
தடக்கை யாற்றலின் விடுத்தனை செய்கென
வேண்டுவ னின்பத முளரி
ஆண்டகை யளியேற் கருள்வதுன் கடனே.

(வெண்பா)

14. கடமான் வினவிக் கலைவினவி நவ்வி
மடமான் வினவியே வந்தார்—இடமான்
உழைசேர் வலிவலத்தா ரொண்பூஞ் சிலம்பர்
தழைசேர் வலிவலத்தார் தாம்.

---

கிடக்குமென இயைக்க. 127. தண்டா - நீங்காத. 129. கான் - வாசனை. இதழிக்கானகம் - கொன்றைவனம்; கொன்றை இந்தத் தலவிருட்சம். 130. மதியுடைப் பாக - பிறையை அணிந்தோய்; பாகம் - பிளவு. 131. பாகம் - பக்கம். 132. வாரணம் - தாருகாவனத்து முனிவருடைய யாகத்திற் றோன்றிய யானையை. 136. உகளம் - இரண்டை. 137. துடக்கிற் சிமிழ்த்த - சங்கிலியாற் கட்டப்பட்ட.

யானையை வென்ற இயல்புடையீராதலின் என்னுயிராகிய கம்பத்திற் கட்டப்பட்டுள்ள நல்வினை தீவினைகளாகிய யானைகளை என்னைவிட்டு நீக்கி அருளவேண்டுமென்பது கருத்து; "இருள்சே ரிருவினையுஞ் சேரா இறைவன், பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" (குறள், 5) என்பது இங்கே அறியற்பாலது.

14. கடமான் - யானையை. கலை - கலைமானை. நவ்விமான் - ஒருவகை மான்; "நவ்வியம் பிணைகொ ணோக்கி" (சீவக. 1046.) இடம் - இடக்கையில். மான்உழை - மான்; ஒருபொருட் பன்மொழி. தழை - தழைமுதலியவற்றாற் செய்து உடுக்கப்படும் உடைவிசேடம். வலி - வன்மை; வலம் - வெற்றி.

சிலம்பரும் வலத்தாருமாகிய தலைவர் வினவிவந்தாரென்க. இது தோழி கூற்று.

(கட்டளைக் கலித்துறை)

15. தாமே தமக்கு நிகராய் வலிவலந் தானுகந்தார்
ஆமே யெவர்க்கு மதிகர்விண் ணூடு மவனிபுக்கும்
பூமே லவனு மவன்ரு தையுமுன்னம் போந்தகதை
நாமே யுரைத்தல்செய் தாமுரை யாநிற்கு நான்மறையே.

(அகவல்)

16. மறைநெடு முடியினு மடியவ ருளத்தினும்
உறைதரு கருணை நிறைதரு மிறைவ!
கொன்றைதேன் றுளிப்பச் சென்றுசென் றலம்பிக்
கங்கைநீர் துளும்பப் பொங்குதிரைத் திநீர்
நுரைவழிந் தன்ன விரைசெறி தும்பைத்
தெரியல்போ தவிழ்த்துப் புரிசடை சரியத்
தூற்றிய வமுதத் துளிதெறித் தாங்கு
வீற்றுக் கிடந்த வெள்ளிவெண் புள்ளி
மறிமா னெழுந்து குடிபுக வூக்கப்
பொறிப்பணம் விரித்துக் கறுப்பணர் காட்டி
இரையெனத் தலையெடுத் துரகமங் காப்பக்
குறைமதி சுழன்று நிறைமதி யேய்ப்ப
அரவமும் புலியும் பரவியென் புருக
மன்றி லாடிய மென்ருட் பதும!
அரக்குவழித் தன்ன உருக்கிளர் கமலம்

---

15. தாமேதமக்கு நிகராய்: "தாமே தமக்கொப்பு மற்றில்லவர்" (சிற். 228.) வலிவலத்தை உகந்தவரே எவர்க்கும் அதிகர். வலிவலந்தான்; தான்: அசைநிலை. கதையை நாமா உரைத்தனம்? வேதமே சொல்லும்.

16. 3. கொன்றை - சடையிலணிந்த கொன்றைமலர். அலம்பி - ஒலித்து. 4-5. தும்பைமலருக்குக் கங்கைநுரை உவமை. 6. தெரியல் - மாலை. 9. குடிபுக - சடைக்காட்டிற் குடி புகும்வண்ணம். ஊக்க - முயற்சி செய்ய. 10. பொறிப்பணம் - புள்ளிகளையுடைய படம். அணர் - கழுத்து. அங்காப்ப - வாய்திறக்கும்வண்ணம். 12. ஏய்ப்ப - ஒத்து விளங்க; இவ்வடியிற் கூறப்பட்ட கருத்தை, "மண்மேல், உய்த்துணரும் பெரும் புலவர் குறைமதியும் நிறைமதியா யொளிர்ந்த தம்மான், மெய்த்தடைச் சுழற்சியிலென் றறிவித்தா னமக்கென்று விளங்கத் தேர்ந்தார்" (சூனிர மாநகர்ப்புராணம், சங்கப்புலவர் பூசித்தபடலம், 34) என்பதனாலும் அறியலாம். 13. அரவமும் புலியுமென்றது முறையே பதஞ்சலியையும் வியாக்கிரபாதரையும். 15. அரக்குவழித்தன்ன - சாதிலிங்கம் பூசினாற்போன்ற; "திருமுக மவிழ்ந்த தெய்வத் தாமரை, ஆசி லங்கை யாக்குத்தோய்ந் தன்ன, சேயிதழ்" (சிறுபாண். 73-5.); "நுண்சேறு வழித்த" (நெடுநல். 157.)

வரியளி முரலப் புரிமுறுக் கவிழ்தொறும்
தடந்தீப் பட்டெனத் தன்சிறை விரித்துப்
பார்ப்பினந் தழீஇய பானிற வன்னம்
மயிலுடன் வதியும் புயல்வளர் பொதும்பர்
மருங்குசூழ் கிடந்த வலிவல மூதூர்
வீற்றிருந் தருளு மாற்றருஞ் செல்வ!
சின்மலர் தூவிநின் பொன்னடி போற்றி
என்னுடைச் செய்தி பன்னுவன் கேண்மதி

(தீச்செயல்கள்)

அன்பிற் றீர்த லருளொடு படாமை
தெருளாக் காட்சி செய்தநன் றயர்த்தல்
பெரும்பொறை தவிர்தல் பிறன்பொருள் விழைதல்
பட்டிமை பயிறல் பாலிற் கோடல்
மான மதாணி பூணுது மறுத்தல்
அழுக்கற் றினைத லவாக்கடல் படிதல்
அறங்கூ றுமை புறங்கூறு விரித்தல்
பொய்யுரை படித்தல் மெய்யுரை விடுத்தல்
கல்வியிற் றிறம்பல் கடுஞ்சொல் வடித்தல்

---

15-7. தாமரைப்பூவிற்குத் தீயை உவமை கூறுவதுண்டு; "நீத்துடை நெடுங் கயந் தீப்பட மலர்ந்த, கடவு ளொண்பூ" (பெரும்பாண். 289-90); "செறுவிற் பூத்த சேயிதழ்த் தாமரை, அறுதொழி லந்தண ரறம்புரிந் தெடுத்த, தீயொடு விளங்கு நாடன்" (புறநா. 397: 19-21); "நிரைநெ டுங்கய நீரிடை நெருப் பெழுந் தனைய, விரைநெ கிழ்ந்தசெங் கமலமென் பொய்கையின் மேவி" (பெரிய. உருத்திர. 5.) 19. பொதும்பர் - சோலை. 15-9. "அள்ளற் பழ னத் தரக்காம்பல் வாயவிழ, வெள்ளந்தீப் பட்ட தெனவெரீஇப் - புள்ளி னந்தங், கைச்சிறகாற் பார்ப்பொடுக்குங் கவ்வை யுடைத்தரோ, நச்சிலை வேற் கோக்கிள்ளி நாடு" (முத்.) 22. சின்மலர்தூவி - சில மலர்களால் அருச் சித்து; " ஓதிமா மலர்கள் தூவி " தே.

23-47. இவ்வடிகளில் ஆசிரியர் தம்பாலுள்ள தீச்செயல்களைக் கூறு கிறார்.

24. அன்பில் தீர்தல் - அன்பினின்றும் நீங்குதல்; அன்பின்மை. 25. நன்று - நன்றியை; தருமத்தையுமாம். அயர்த்தல் - மறத்தல். 27. பட்டிமை - வஞ்சனை. பாலிற் கோடல் - நடுநிலைமை நீங்கி ஒருசார்பாக இருத்தல்; பால் - பக்கம். 28. மான மதாணி - மானமாகிய பதக்கத்தை; "மான வருங்கலம்" (நாலடியார்.) 29. அழுக்கற்று - பொறாமையுற்று. 32. கல்வியிற்றிறம்பல் - கற்றவண்ணம் நடவாமல் மாறுபடுதல்; "கற்றபின், நிற்க வதற்குத்தக" (திருக்குறள்) என்பது இங்கே கருதற்குரியது. கடுஞ்சொல்

இன்மொழி மறுத்த லிறைவனூ லிகழ்தல்
பயனில கூறல் பணிமொழி நயவாமை
தவவினை துறத்தல் தானந் தீர்தல்
படைமடம் படுதல் கொடைமடம் படாமை
அறிமட மின்மை நெறிகடந் தடர்தல்
தெய்வத மிகழ்தல் தீத்தொழி லியற்றல்
ஐம்பெரும் பாதகத் தளறுபாய்ந் தழுந்தல்
இந்தியப் பெரும்படைக் கிரிந்துபுறங் கொடுத்தல்
பாற்படு பகுதியிற் பகுத்துண் ணாமை
பிறர்மனை விழைந்து பிழைத்தன புரிதல்
சிற்றினஞ் சேர்தல் செய்தவர்க் கடிதல்
கைதவ வேடஞ் செய்வன செய்யாமை
ஆதி யாய தீதடர் செய்கை
சொன்ன வன்றிச் சொல்லாது கிடந்த
இன்ன பிறவு மென்செயன் மன்னோ
எண்ணினை பெய்த வீட்டிய விவ்வினை
உண்ணி னல்ல தொடிவது மன்றே

---

வடித்தல் - இன்சொற்களைவிட்டுத் தீய சொற்களையே கைக்கொள்ளல். 33. இறைவன்நூல் - வேதாகமங்கள் முதலியன; இவற்றைப்பதிநூலென்பர். 34. பணிமொழி - பணிவைப் புலப்படுத்தும் மொழி; "வணங்கிய வாயினர்" (குறள். 419.) 36. படைமடம் - வீரரல்லாதார் மேலும் முதுகிட்டார் மேலும் புண்பட்டார் மேலும் மூத்தார் இளையார் மேலும் செல்லுதல். கொடைமடம் - வரையாது கொடுத்தல்; "பேகன், கொடைமடம் படுத லல்லது, படைமடம் படான்பிறர் படைமயக் குறினே" (புறநா. 142) என்பதனாலும் அதன் அடிக்குறிப்பாலும் விளங்கும். 37. அறிமடம் - தாம் கூறுகின்றவற்றை உணரும் அறிவில்லாதார்மாட்டு அறியாமைப்பட்டிருத்தல்; "அறிமடம் படுதலு மறிவுநன் குடைமையும்" (சிறுபாண். 2116.) என்பதனையும் அதனுரையையும் பார்க்க. 39. ஐம்பெரும் பாதகம் - பஞ்சமகாபாதகங்கள்; அவையாவன கொலை, பொய், களவு, கள்ளுண்டல், குருநிந்தை என்பன. அளறு - சேறு; பாதகமாகிய அளறு. 40. இந்தியம் - இந்திரியம். 41. பகுத்துண்ணாமை - தென்புலத்தார் முதலியவர்க்குப் பகுத்து அளித்து உண்ணாமை. 43. சிற்றினங்களாவன நல்லதன் நலனும் தீயதன் தீமையும் இல்லையென்போரும் விடரும் தூர்த்தரும் நடருமுள்ளிட்டகுழு. செய்தவர்க் கடிதல் - தவம்செய்வோரைக் கோபித்தல் முதலியன. 44. கைதவவேடம் - வஞ்சனையான வேடம்; "வலியி னிலைமையான் வல்லுருவம்" (குறள்.) 48. எண் - எண்ணம்; அளவுமாம். இனைபு - வருந்துதலை. 49. உண்ணின் அல்லது - அனுபவித்தாலன்றி. ஒடிவது - நீங்குதல்; "ஒடியா விழவு" (அகநா.

ஓடியா தாக வடைவது மின்றே
அந்தமி லின்பத் தழிவில் வீடே
நொந்தனன் காமதி யெந்தையென் றிரங்கவும்
வந்துநீ தண்ணளி வழங்கவு மிலையே
நீமனத் துணைவ னாதலின் யான்செயும்
இச்செயற் காதி யெளியேன் மனனே
ஆயினு மதற்கு மாதிநீ யாதலின்
யானினிப் பொறுக்க லாற்றேன் முறையிட்
டென்செய லனைத்து நின்செய லாமெனப்
பலரவை யேறிநின் றன்னை
அலர்தூற் றுதினி யமைகலன் யானே.

(வெண்பா)

17. யானே யடிமை யெனையடிமை கொண்டவனீ
தானே வலிவலஞ்சேர் தாணுவே—ஊனே
எடாத படிகாத் தெடுப்பி னிலம்பா
டடாத படிகாத் தருள்.

(கட்டளைக் கலித்துறை)

18. அருளு மடக்கமும் வாய்மையு நல்ல வறிவுமுண்மைப்
பொருளு மொழுக்கமும் யாதென்று கேட்பிற் புலம்புகொண்டு
மருளு மடநெஞ்ச மேயஞ்ச லீசன் வலிவலமே
தெருளு மியல்பி னிறைஞ்சியு மேத்தியுஞ் சிந்திப்பதே.

(அகவல்)

19. தேனலர் கொன்றைத் தெரியலும் பூநகு
தும்பையந் தொடையலும் வம்பவிழ் குரவமும்
கொடிப்பா சறுகு மடுக்கிய மத்தமும்
தாதகித் தாமமுங் கூவிளப் பிணையலும்
நொச்சிப் போதுஞ் செச்சைக் கண்ணியும்

---

149.) 50-51. ஓடியாதாதலின் வீடு அடைவதுமின்று. 52. மதி : முன்னிலை யசை. காவென்று அடியேன் இரங்கவும். 56. அதற்கும் - அம்மனத்திற்கும். 60. அலர் தூற்றல் - பலரறியச் சொல்லுதல்.

17. ஊன் - உடம்பு. இலம்பாடு - வறுமை.

18. இறைஞ்சல் உடம்பின்வினை; ஏத்துதல் வாக்கின்வினை; சிந்தித்தல் மனத்தின்வினை. யாதென்று கேட்பின் சிந்திப்பதேயென இயைக்க.

19. 2. குரவம் - குராமலர். 3. மத்தம் - ஊமத்தை மலர். 4. தாதகித் தாமம் - ஆத்திப்பூ மாலை. கூவிளம் - வில்வம். 5. செச்சை - வெட்சி மலர்.

கொத்தலர் வன்னிக் கத்திகை யணியலும்
நகுவெண் டலையும் பகுவாய்ப் பாந்தளும்
கொக்கி னிதழுந் தொக்குமறி புனலும்
திங்கட் கொழுந்துந் தங்குபு கிடப்ப
உரைசெறி சுருதி பரசுநான் முகத்து
விரைசெறி கமலத் தரைச வன்னம்
காணுஉ தயராக் ககனமூ டுருவிச்
சேணிடைச் சென்று சிந்தையுங் கடந்து
மேருக் குன்றம் விழுதுவீழ்த் தன்ன
வார்சடை புனைந்த மணிநெடு முடியோய்!
கொத்தழல் விழிபுடை கொழித்தெனக் கிடந்த
வித்தக வெண்பொடி மத்தகத் திறையோய்!
ஞாயிறுந் திங்களுஞ் சீறுமா ரழலும்
வீறுவீ றுதித்தெனக் கூறுநாட் டத்தோய்!
சாம கீதமுந் தந்திரத் தொகுதியும்
ஓதுசெம் பவள வுவாமதி முகத்தோய்!
சங்கவெண் டோடும் பொங்கொளி விரிக்கும்
சுடிகைப் பாந்தட் புனைமணிக் குழையும்
நிலவும் வெயிலுங் குலவினின் றெறிப்ப
அடியர் பாடலு மண்டர்தங் குறையும்
முடிய வினவி யொடியா நேயத்
தருள்விழிக் கிசைக்கு மிருசெவி யுற்றோய்!
செந்தழல் வடிவ மாதலி னெருபுடை
கந்துள்கிடந் தனைய கறைகெழு மிடற்றோய்!
அண்டமு மகண்டமு மடைய வீசிய
தண்டாக் கொற்றத் தெண்புய வரையோய்!
ஆலமூற் றிருக்கு மாயிரம் பகுவாய்
கோல வாளராக் கோட்டுகங் கணத்தோய்!
மடக்கொடி யிமய மாதுவா ணுதலும்
தடக்கணும் பொரூஉந் தாமிவை யென்னப்
பரசு மானும் பற்றுகைத் தலத்தோய்!

---

6. கத்திகையணியல் - மாலை; இருபெயரொட்டு. 7. பாந்தள் - பாம்பு. 8. கொக்கின் இதழ் - கொக்கிறகம்பூ. 10-11. அன்னமென்றது பிரமதே வரை. 17. மத்தகம் - நெற்றி. 19. வீறு வீறு - வேறு வேறு. 20. தந்திரம் - ஆகமம். 23. சுடிகை - உச்சி. 25. குறை - காரியங்கள்; "முறைவேண் டுநர்க் குங் குறைவேண் டுநர்க்கும்" (பெரும்பாண். 443.) 29. கந்துள் - கரிக் கட்டி. 31. தண்டாக்கொற்றம் - நீங்காத வெற்றி. 32. ஆலம் - விடம். 33. கோட்டு - வளைத்த. 36. பரசு - மழுப்படை. 34-6. உமாதேவியின்

நிலவுநூற் றென்னக் குலவுமுந் நூலும்
பொன்வார்ந் தன்ன பொறிவா ளரகமும்
கருமதி யுடனொரு வெண்பிறை கிடந்தன
ஆமை யோடு மேனவெண் மருப்பும்
புனமயிற் சாயல் வனமா னேக்கி
தனதடப் பொறியும் வரிவளைத் தழும்பும்
பன்னிரு தடந்தோட் கொன்னிளஞ் சேயின்
சிற்றடிச் சுவடு முற்றமார் பகத்தோய் !
பூவா வேங்கைப் புள்ளியந் தோலொடு
கூவா வாரணக் கோழுரி யசைத்தோய் !
ஒருதா ளூன்றி நீர்நிலை நின்றும்
இருதா ளுவமை யின்றுகா றெய்தாக்
கமலம் பழித்துக் கனைகுரற் கழலுடன்
சிலம்புகிடந் தொலிக்குஞ் செவ்வித் தாகிச்
சேயொளித் திகிரியொடு வெள்வளை தாங்கிய
மாயோன் சாத்திய வனசத் தாயிரம்
தண்மல ரன்றிக் கண்மலர் புனைந்தும்
காணு துழலச் சேணிடை யொளித்து
நேசச் சிறுவற் குயிர்க்கொடை புரிந்து
பாசக் கூற்றுயிர்ப் பலியுண்டு கறுத்துப்
போதவிழ் கோதைப் பூங்கொடி யிமய
மாதுமை மடந்தை வருடச் சிவந்து
மண்ணவர் நெருங்கி மலர்மழை பொழிந்து
விண்ணவர் மணிமுடி விழுத்தழும் பிருந்து
நாவல னேவலி னேவலா ளாகி

---

நெற்றிக்குப் பரசும் கண்ணுக்கு மானும் உவமை. 38. வார்ந்தன்ன - ஒழுகினு லொத்த. 39. கருமதி - கரிய பூர்ணசந்திரன்; இல்பொருளுவமை. 40. ஏனம் - பன்றி. 39-40. ஆமையோட்டிற்குக் கருமதி யுவமை. 41. மானேக்கி - உமாதேவியார். 42. பொறி - சுவடு. 43. கொன் - பெருமை. இளஞ்சேயின் - முருகக் கடவுளினது. 45. பூவா வேங்கை - புலி; புலியைப் பூவாவேங்கை யென்றது வெளிப்படை என்னும் இலக்கணத்தின்பாற்படும். 46. கூவா வாரணம் - யானை; வெளிப்படை. கோழுரி - கொழுமையையுடைய தோல்.

47. இதுமுதல் திருவடியின் சிறப்புக் கூறப்படும்.

55. சிறுவற்கு - மார்க்கண்டேயருக்கு. 56. பாசம் - கயிறு; இது காலபாச மெனப்படும். 59. பொழிந்து - பொழியப்பட்டு. 61. நாவலன் - சுந்தரமூர்த்தி நாயனார். 61-62. "நள்ளிருள் யாமத்து நாவலர்பெருமான், தள்ளாக் காத றணித் தற் கம்ம, பரவை வாய்தலிற் பதமலர் சேப்ப, ஒருகாலல்ல விருகா னடந்து"

ஒருமுறை யன்றி யிருமுறை நடந்து
குறையாச் சனனக் கோடை தீர
நிறைகூ ரின்ப நீழ லாகி
ஓத வோத வுலவாக் காட்சி
வேத முடியின் விளங்கிய தாளோய்!
வேரள வொழுகி விரைச்செழுங் கமலத்
தாள்கவைஇ வரிச்சிறைத் தாதமர் வண்டினம்
கூட்டுண வொழுகிக் குண்டலைப் பாய
விரிதலைத் தொடுத்த பிரசம் பொருது
பூங்கழை யொருபாற் பாங்குற வளைந்தது
கருப்புவில் குழைத்துச் சுருப்புநாண் பிணித்து
முள்ளரை முளரி முனையம் பநங்கன்
தெள்ளிதி னெய்யுஞ் செய்தி யேய்க்கும்
வளவய லுடுத்த வலிவல மூதூர்
நண்ணிய மனத்துணை நாதநீ கேண்மோ
ஓதுவ தொன்றுள தியாதென வினவின்
அவிரொளி மயமா யசைவொன் றின்றி
இவர்தரு மிறையோய் நீயுங் கவரா
மாதுமை மடந்தையுஞ் சூதாடல் செயுநர்
இனமாக் கழக மெய்தினிர் தொடங்கி
வண்ணமீ ரிரண்டு மெண்வர வமைத்துக்
கண்ணுதல் வரூஉந் தண்ணிய வுயிர்நாய்
நாற்கதி வீதியிற் பாற்படப் பரப்பி
ஆணவ நீல வவிர்மணி யுழக்கில்
தருமா தரும விருகவ றிட்டுக்
கடவலுங் கடவ வாயங் கண்ணி

---

(திருவாரூர் நான் மணிமாலை, 36 : 31-4.) 68. கவைஇ - வளைந்து; வளைதல் வண்டின் தொழில். பி - ம். 'சிறைக்காமர்'. 69. பாய - பாயும்படி. 70. பிரசம் - தேனடை. 79. இவர்தரும் - பரந்துள்ள. கவரா - விரும்பி; "கவர்வு விருப்பாகும்" (தோல். உரியியல்.) 82. வண்ணம் ஈரிரண்டு - வர்ணம் நான்கு. 83. கண்ணுதல் - எண்ணுதல். உயிர்நாய் - உயிர்களாகிய நாய்; "பளிக்குநாய் சிவப்பத் தொட்டு" (கம்ப. மிதிலைக்.) 84. நாற்கதி - தேவ கதி முதலிய நான்கு கதிகள்; அண்டஜம், சுவேதஜம், உத்பீஜம், சராயுஜ மென்னும் நான்குமாம். 85. ஆணவமாகிய உழக்கில்; "குலவும் பவழ வுழக்கிற் கோதை புரளப் பாடி" (சீவக. 927); "கவளயானை பணையின்யாளி கால் வகுத்த பலகையிற், பவளமான நீலமான கருவிமுன் பரப்பினர்" (வி. பா. சூதுபோர்ச். 174.) 86. கவறு - பாச்சிகை. 87. ஆயம் -- ஆதாயம்.

எண்டிசை யரங்கத்துத் தண்டா தலமந்
தலமருங் காலை யாரஞ ரெய்தி
இறந்தும் பிறந்து மின்ன லுற்றும்
மன்ன லின்றி யின்பமுற் றேடியும்
அரணஞ் சார்ந்து மாங்கது வின்றி
மரணஞ் சார்ந்து மாளாது பழுத்தும்
பரப்புநா யின்னணம் பருவரல் கூர
அன்று பூட்டிய வாட லாயம்
இன்று காறு மீறுகண் டிலதே
காணா தாக யானு மாணா
தந்நெடு வீதியிற் பன்னெடுங் காலம்
சுழன்றன னாக வழுங்குவ லந்தோ!
நுமக்கது விளையாட் டெமக்கோ புன்கண்
ஆதலி னெங்க ணன்பாற்
காதலி னதுநீ கடைக்கூட் டுவதே.

(வெண்பா)

20. கூட்டுவது மன்பருடன் கூட்டியபின் சேவடியைக்
காட்டுவது நாயேனைக் காப்பதுவும்—மூட்டுகனல்
வண்ணா வலிவலத்துள் வாழுமிறை வாமூன்று
கண்ணா வுனக்கே கடன்.

(கட்டளைக் கலித்துறை)

21. கடந்தான் கணக்கிலி காலங்கள் ஞாலங்கள் கற்பமெல்லாம்
இடந்தா னிடந்துமங் கெய்துகில் லான்சந் திரவிலன்று
நடந்தான் வலிவல மூதூர் மனத்துணை நாதனென்னத்
திடந்தா னுனக்குள தேநெஞ்ச மேயென்கொல் சிந்திப்பதே.

---

88. தண்டாது - நீங்காமல். அலமந்து - சுழன்று. 91. இன்பம்முன் தேடியும் - இன்பமுதலியவற்றைத் தேடியும். 92. அரணம் - பாதுகாப்பு. 93. பழுத்தும் - மிக்க மூப்படைந்தும். 94. பரப்புநாய் - பரப்பப்பட்ட உயிராகிய நாய். 95. ஆடலாயம் - சூதாட்டம். 99. அழுங்குவல் - வருந்துவேன். 100. புன்கண் - துன்பம். 102. அது நீ கடைக்கூட்டுவதே - அவ்வாட்டத்தை முடிப்பதே அடியேனுடைய வேண்டுகோள்.

ஓதுவது (77) கடைக்கூட்டுவதே (102) என வினைமுடிவு செய்க.

20. பி - ம். 'கூட்டிப்பின்'.

21. கடந்தானென்றது சிவபெருமானை. இடந்தானென்றது திருமாலை. சந்து - தூது; பரவை நாய்ச்சியார் திருமாளிகைக்குச் சென்றது. சிந்திப்பது - கவலைப்படுவது.

(அகவல்)

22. சிந்தையுஞ் செல்லா தாயினும் வந்தென
துள்ளத் துள்ளே யள்ளூறி விளைந்த
துன்னரு ளமிழ்தே பின்னெவ னுளதோ
ஆதலின் மனத்துணை யாபவ னீயே
கடுங்கா லொற்றக் கதலிக் கானம்
நடுங்கிய தேய்ப்ப நெடுங்கொடி நுடங்கும்
செம்பொற் புரிசையும் பைம்பொன் மேடையும்
மேருவென் றிரவி சூழ்வர நோக்கும்
கோபுர நிலையுஞ் சோபான மாடமும்
அரமியத் தலமும் விரவிச் சிறந்த
வலிவல மூதூர் வானவ கேண்மோ
நான்குதலை யிட்ட வெண்பதிற் றிலக்கத்
தூன்கெழு தோற்றத் துராஅய்ப் போந்து
மானிடம் பெறுதலு மரிதே பெரிதும்
பனியின் சீதமும் வெயிலின் கேதமும்
உடைய தன்றி யுறுபுன லுடைய
அகநா டெய்த லதனினு மரிதே
இழிதொழில் வாழ்க்கை யிழிகுல மொரீஇ
ஒழுக்கம் பூண்ட வொடியா வாய்மை
விழுக்குலத் துதிப்பது மரிதே யதாஅன்று
கூனுங் குருடு மூகையு நீங்கி
உருவின் மிக்கதோ ருடம்பது பெறுதலும்

---

22. 2. அள்ளூறி - மிக்கு ஊறி; "அள்ளூறிய அன்பினுனினைந்தா ரறிந்தார்களே" (தேவாரம்.) 2-3. விளைந்தது உன் அருளமிழ்து. 5. ஒற்ற - அடிக்க; கடுங்காலொற்ற: "கடுங்கா லொற்றலிற் சுடர்சிறந் தருத்து" (பதிற். 25.) கதலிக்கானம் - வாழைக்காடுகள். 9. சோபானம் - படி. 13. உராஅய் - பெயர்ந்து. 14. மானிடம் பெறுதல் அரிது: "அரிதாற், பெரிய யோனிகள் பிழைத்திவண் மானிடம் பெறலே" (சீவக. 279.) 17. அகநாடு - மருதநிலம். 15-7. "விண்டு வேய்நா லூன்விளை கானவ ரிடனும், கொண்டு கூர்ம்பனி குலைத்திடு நிலைக்களக் குறும்பும், உண்டு நீரென வுண்ணா யினு மரியன வொருவி, மண்டு தீம்புனல் வளங்கெழு நாடெய்த லரிதே" (சீவக. 2750.) 18. ஒரீஇ - நீங்கி. 19. ஒடியா - தவிராத. 18-20. "வில்லின் மாக்கொன்று வெண்ணிணத் தடிவிளிம் படுத்த, பல்வி ஞர்களும் படுகடற் பரதவர் முதலா, எல்லை நீங்கிய விழிதொழி விழிகுல மொருவி, நல்ல தொல் குலம் பெறுதலு நரபதி யரிதே" (சீவக. 2751.) 21. மூகை - ஊமை.

அரிதே யனைத்து மடையினு மிடையா
துன்னடிக் குறாஉ முள்ளமோ வரிதே
ஒருவழி யனைத்து மொன்றினும் யாக்கை
வெருவரு நிலைமை விளம்புமா றடைத்தே
காஞ்சன வுருக்கொடு களத புதத்துருக்
கேஞ்சென விசைந்துழி யிறதலு மொன்றே
அன்னது பிழைப்பின் வெண்ணெயிற் றிரண்டு
பின்னது விளிதலு மொன்றே யதாஅன்று
நான்பிற வுரைப்பதை யெவனோ கூன்புற
யாமை போன்றஃ திழத்தலு மொன்றே
திங்கள், உருவெனத் தோன்றி யுலத்தலு மொன்றே
தருவென விருநிதி சார்ந்தவர்க் கருளி
ஒருபெயர் புனைவுழி யொழிதலு மொன்றே
குன்று வன்பிற் குரவர்ப் பணிந்து
மையாட் டயர்வுழி மாய்தலு மொன்றே

---

23. இடையாது - பின்னிடாமல். 22-3. "உருவின் மிக்கதோ ருடம்பது பெறுதலு மரிதே" (சீவக. 2752.) 23-4. "காம னன்னதோர் கழிவனப் பறிவொடு பெறினும், நாம நாற்கதி நவைதரு நெறிபல வொருவி, வாம னூனெறி வழுவறத் தழுவின ரொழுகல், எம வெண்குடை யிறைவமற் றியாவது மரிதே." (சீவக. 2753.) 27. காஞ்சன உருக்கு - தங்கத்தை உருக்கிய நீர். களத புதத்து உருக்கு - வெள்ளியை உருக்கிய நீர். 28. எஞ்சென - எய்ந்ததென. 29. அன்னது - அங்ஙனம் இறுதலை. வெண்ணெயின் - வெண்ணெய்யைப் போல. 27-30. "இன்ன தன்மையி னருமையி னெய்திய பொழுதே, பொன்னும் வெள்ளியும் புணர்ந்தென வயிற்றகம் பொருந்தி, மின்னு மொக்குளு மெனநனி வீயினும் வீயும், பின்னை வெண்ணெயிற் றிரண்டபின் பிழைக்கவும் பெறுமே." (சீவக. 2754.) 31-2. கூன்புற யாமை - வளைந்த முதுகை யுடைய ஆமை. 33. திங்கள் உருவென - பூர்ணசந்திரன் வடிவம் போலக் குறையா வடிவுடனே. 31-33. "வெண்ணெ யாயது வீங்குபு கூன்புற யாமை, வண்ண மெய்தலும் வழுக்கவும் பெறுமது வழுக்கா, தொண்மை வாண்மதி யுருவொடு திருவெனத் தோன்றிக், கண்ண னாழக் கவிழினுங் கவிழுமற் றறிநீ" (சீவக. 2755.) 34. தரு - கற்பகதரு. 35. பெயர்புனைவுழி - பெயர் வைக்குமளவிலே. 36. குரவர்ப்பணிந்து - தாய் தந்தையரை வணங்கி. 37. மையாட்டயர்வுழி - ஐந்து பிராயத்தில் மைபூசிய ஓலையிலெழுதப்பெற்ற நூல்களை முறையே படிக்கும்பொழுது; "மதலைமையாடு கென்றே", "ஐயாண்டெய்திமையாடி", "வழுவில் பொய்கையுண் மலரென வளர்ந்து மையாடி" (சீவக. 367, 2706, 2756.) 34-7. "அழித வின்றியங் கருநிதி யிரவலர்க் கார்த்தி, முழுதும் பேர்பெறு மெல்லையுண் முரியினு முரியும், வழுவில் பொய்கையுண் மலரென வளர்ந்துமை யாடிக், கெழீஇயி னரொடுங் கிளையழக் கெடுதலுங்

கல்வியுங் கேள்வியுங் கசடற நிரம்பிச்
செல்வுழி வாழ்நா டேய்தலு மொன்றே
காம னென்னக் கழிவனப் பெய்தி
வாம மேகலை மங்கையர்த் தழீஇ
யாமமும் பகலு மறியா தெய்தும்
ஏம வின்பத் திறுதலு மொன்றே
மக்களொடு மகிழ்ந்து மனையறங் காப்புழித்
தொக்க தீப்பிணிச் சுழல்விழிப் பகுவாய்
வேங்கை பாய வீதலு மொன்றே
தள்ளு மூசலுஞ் சகடக் காலும்
வெள்ளநீர் மொக்குளும் விரைசெலற் கறங்கும்
கொண்ட னிழலுந் தண்டாது நிலைப்பினும்
நிலையா நிலைமை நிலையின தன்றே
இவ்வகை பணைத்துனை யெவ்வகைத் தொழுகேன்
கவ்வை நீங்கிக் கான்மாத் திரைவயிற்
செவ்விதிற் பாவனா தீத மெய்தி

---

கெடுமே" (சீவக. 2756.) 38. கசடு - ஐயம் திரிபு ஆகிய குற்றங்கள்; (குறள், 391, பரிமேல்.) 40. கழிவனப்பு - மிக்க அழகு. 41. வாமம் - அழகு. தழீஇ - தழுவி. 42. யாமம் - இரவு; "காமமே நுகர் வார்தம காதலால், யாம மும்பக லும் மறி யாமையால்" (சீவக. 135.) 38-43. "கெடுத லவ்வழி யில் லெனிற் கேள்விக டுறைபோய், வடிகொள் கண்ணியர் மனங்குழைந் தநங்க னென் றிரங்கக், கொடையுங் கோலமுங் குழகுந்தம் மழகுங்கண் டேத்த, விடையிற் செல்வுழி விளியினும் விளியுமற் றறிநீ" (சீவக. 2757.) 45-6. பிணியாகிய வேங்கை: "பேதுசெய்பிணிப் பெரும்புலி" (சீவக. 2759.) 40-46. "எரிபொன் மேகலை யிலங்கரிச் சிலம்பொடு சிலம்பும், அரிபொற் கிண்கிணி யணியிழை யரிவையர்ப் புணர்ந்து, தெரிவில் போகத்துக் கூற்றுவன் செகுத்திடச் சிதைந்து, முரியும் பல்சன முகம்புடைத் தகங்குழைந் தழவே", "காதன் மக்களைக் கண்டுவந் தினிதினிற் கழிப்பப், பேதுசெய் பிணிப் பெரும்புலி பாய்ந்திடப் பிணமாம், ஒத மாக்கட லுடைகலத் தவருற்ற துறவே" (சீவக. 2758-9.) 47. சகடக்கால் - வண்டியின் உருளை; "அகடுற யார்மாட்டு நில்லாது செல்வம், சகடக்கால் போல வரும்" (நாலடி. 2.) 48. மொக்குள்: "மாரி மொக்குளின் மாய்ந்து" (சீவக. 409.) கறங்கு - காற்றாடி. 49. கொண்டல் - மேகம். 47-50. "கொள்ளிவட்டங் கறங்குதிரை சகடக் கால்வெண், குறுந்தொடியார் தயிர்மத்து நெடுந்தாளுஞ்சல், எள்ளிவிட்ட தொழிற்பிறவித் தண்டல்" (மதுரைப்பதிற். 47.); "சுழலுங் கறங்குஞ் சுற் றுந் திரிகையும், ஒடுஞ் சகடமுங் கேடுறச் சுற்றி" (மதுரைமும். 19: 50-51.) 51. பணைத்து - பிழைத்து; "அமர்க்க ணமா னருநிற மூள்காது, பணைத்த பகழி" (நற். 165: 1-2.)

வாளா திருக்க வரந்தந்
தாளாக் கொள்வ தையநின் னமைவே.

(வெண்பா)

23. வேண்டீர் வலிவலஞ்சேர் விண்ணவனைப் பெண்மோகம்
பூண்டீர் குழலுமவர் பொய்யுரையும்—ஈண்டும்
அறலிக் கெனவகுப்பீ ரந்தோ கொடுபோம்
மறலிக் கெனவகுப்பீர் மற்று.

(கட்டளைக் கலித்துறை)

24. மற்றா ருதவிசெய் வார்நெஞ்ச மேநம் வலிவலத்தை
உற்றார் மனத்துணை நாதரல் லா லுகந் துள்ளுகண்டாய்
சுற்றார் யமபடர் சூலமும் பாசமுஞ் சுற்றிச் சுற்றி
இற்றா ரெனக்கழுத் திற்சுருக் கிட்டுநின் றீர்க்குமன்றே.

(அகவல்)

25. அன்றெனி னன்றா யாமெனி னதுவாய்
ஒன்றெனி னொன்றாய்ப் பலவெனிற் பலவாய்
நின்றதுன் னிலைமை யாதலி னன்று
தெள்ளமு திமையோர் தெவிட்டவுண் டுகப்ப
ஒள்ளழல் விடமுனக் குதவிய தவறு
தீர்ப்பது வேண்டித் திரைக்கரங் கூப்பி
நிலஞ்சூழ் பரவை நிரைமல ரேந்தி
வலஞ்சூழ் வரூஉம் வண்ண மேய்ப்பப்
பொய்கைசூழ் வலிவலப் புகழ்நக ரமைந்தோய் !
முற்றுணர்ந் துன்சீர் மொழிவது முளரி
உற்றநான் முகற்கு மொல்லுவ தன்றெனிற்
சிறியேன் செப்புவ தெவனோ குறியாது
உள்ளன போல வில்லன விசைப்பினும்

---

23. அறல் - கருமணல். இக்கு - கரும்பு. குழலுக்கு அறலும் சொல்லுக்குக் கரும்பும் உவமைகள்; நிரனிறை.

24. இற்றாரென - இறந்தார்களென்று சொல்லும்படி. ஈர்க்கும் அன்று - இழுக்கும் அக்காலத்தில். ஈர்க்கும் அன்று மற்று ஆர் உதவி செய்வார்.

25. 1-3. "ஒன்றே யென்னி னொன்றேயாம் பலவென் றுரைக்கிற் பலவேயாம், அன்றே யென்னி னன்றேயா மாமே யென்னி னாமேயாம்" (கம்ப. யுத்த. 1.) 6. வேண்டுவது கடலின் தொழில். 7. பரவை - கடல். 6-9: பொய்கைக்குக் கடல் உவமை. 11. ஒல்லுவது - இயல்வது.

நல்லன போலத் தீயன நவிற்றினும்
புகழ்ந்தன போல விகழ்ந்தன வடியேன்
உரைத்தன ஞயினும் பொறுத்தி
வரைத்தனு வளைத்த மதவலி யோயே!

(வெண்பா)

26. ஓயாப் பிறவி யொழிய மடநெஞ்சே
சாயாத் தவமொன்று சாற்றக்கேள்—மாயாத
வாரிசத்தான் காணு வலிவலத்தான் மங்கையொரு
பாரிசத்தான் பாதமே பற்று.

(கட்டளைக் கலித்துறை)

27. பற்றுகண் டாய்நம் வலிவல நாதனைப் பற்றிக்கொண்டு
சுற்றுகண் டாய்புகழ் சொல்லுகண் டாயம தூதர்வந்தால்
எற்றுகண் டாயந்த மில்லாத வானந்த மெய்தியென்றும்
முற்றுகண் டாய்முற்று மாயாப் பிறவி முயலுநெஞ்சே.

(அகவல்)

28. முயன்மறுத் துடைத்த முற்று மதியுடன்
அயலய லுடுக்கண மரும்பிய வென்னப்
பசுந்துணர்த் தும்பை வெண்பூ மிலைச்சிச்
செவ்வா னேய்க்குஞ் செழுஞ்சடை முடியோய்!
பைந்தொடி யிமயப் பாவையொடு கெழீஇ
இந்திர திருவிலி னெழினலங் கனிந்தோய்!
முலைத்தடஞ் சேதகம் பொறிப்பக் குலைத்துடன்

---

17. வரைத்தனு - மேருவாகிய வில்லை.

26. வாரிசத்தான் - தாமரை மலரிலுள்ள பிரமதேவர்; வாரிசம் - தாமரைமலர். பாரிசம் - பக்கம்.

27. சுற்று - வலஞ்செய்வாயாக. முற்று - முதிர்ச்சி யடைவாயாக. பிறவி முயலு நெஞ்சே - பிறவியை அடைதற்கு முயலும் மனமே.

28. 1. முற்றுமதி யென்றது பிறையை; "முற்று வெண்டிங்கண் முதல்வன்" (தேவாரம்.) 2. உடுக்கணம் - நட்சத்திரக் கூட்டம். 2-3. தும்பை மலர்களுக்கு உடுக்கணம் உவமை. 5. கெழீஇ - பொருந்தி. 5-6. உமையோடு பொருந்திய இறைவன் திருவுருவத்திற்கு இந்திரவில் உவமை; "இருநிறங் கொண்ட விந்திர வில்லெனப், பாற்கட லோடுங் கார்க்கடல் புணர்ந்தென, இமையவெற் புதவிய வுமையவ ளொருத்தியொடு, வீற்றிருந் தருளிய விண்ணவர் கடவுள்" (மதுரைமும். 1 : 47-50.) 7. சேதகம் - சேறு. பொறிப்ப -

வளமுடி நடுமோர் களமரொடு துவன்றிய
கருங்குழற் பசும்பூண் வெள்வா யுழத்தியர்
மருங்குலி னிழிந்த மகாஅ ரொருங்குடன்
தள்ளாக் கோட்டிற் றளர்நடை பயிலா
வெள்ளைக் குருகின் பிள்ளையொடு வதியும்
அள்ளற் பழனத் தணிவய லுடுத்த
மல்லற் செல்வ வலிவல மூதூர்
நயந்துறை மனத்துணை நாத கேண்மதி
வானவர் முடிமிசை மலிதரு நினது
தேனமர் தாமரைச் சேவடி பழிச்சி
மூண்டெழு மன்பால் வேண்டுநல் வரம்யான்
பல்பெருங் கலைகள் பாற்படப் பழகிக்
கல்வியி னெடுங்கரை காண்பது வேண்டும்
இன்னுங் கேண்மோ பன்னுவ திறைவ!
இல்லென விரக்கு மிளிவர வின்றி
மல்லற் செல்வ வாழ்வது வேண்டும்
மற்றுமொன் றயர்த்தன னுற்றுநீ வினவின்
உலைவது சிறிது மின்றியென் னுளமோர்
நிலைமையி னென்று நிற்பது வேண்டும்
பாச வல்லி வேரற வகழ்ந்து
மாசற மேற்கதி வழங்குதல் வேண்டும்
அன்னது வழங்கா யாயினு நின்னடித்
தாமரை தொழூஉந் தாவா நேயம்
இன்னு மின்னு மதுவே யெய்தத்
தருவது வேண்டு நின்னுடைப்
பொருவரி தாய புகழினும் பலவே.

---

தெறிப்ப. 8. முடி - நாற்றின் முடியை. நடுமோர் - நடும்பொருட்டு. களமர் - உழவர். 7-8. "மூலைத்தடஞ் சேதகம் பொறிப்ப மற்றவர், குலைத்துடன் பதித்தலின்" (சீவக. 46.) 10. மருங்குலின் - இடையினின்றும். மகார் - பிள்ளைகள்; எழுவாய். 12. வெள்ளைக்குருகின் பிள்ளை - நாரைக் குஞ்சு. 17. பழிச்சி - துதித்து. 18. வேண்டுநல்வரம் - அடியேன் வேண்டும் நல்ல வரம் ஒன்று. 19. பாற்பட - பகுதிப்பட. 21. கேண்மோ - கேள்; மோ: முன்னிலையசை. பன்னுவது - அடியேன் விண்ணப்பஞ் செய்வது. 22. இல்லென - இல்லையென்று. 24. அயர்த்தனன் - மறந்தேன்; "மறந்தேனதன்றிற மாதவி கேளாய்" (மணி. 3: 69) 25. உலைவு - அலைதல். 27. பாச வல்லி - பாசமாகிய கொடியை; வல்லி - விலங்குமாம். 30. தாவா நேயம் - கெடாத அன்பு. 32-3. பல தருவது வேண்டும்.

(வெண்பா)

29. பலகற்று மீசன் பதம்பணியார்க் கந்த
அலகற்ற கல்விகொண்டே தாமால்—இலகுற்ற
மாதிருக்கும் பாகன் வலிவலத்தான் றாள்பரவு
மாதிருக்கு மாற்று மருந்து.

(கட்டளைக் கலித்துறை)

30. மாற்றும் பிறவிப் பிணிக்கின் மருந்து வருந்தவந்து
தோற்றுங் கடுங்கண் மறலிக்குக் கூற்றின்று சூழ்ந்தவிண்ணோர்
சாற்றும் பிரானம் வலிவலைத் தான்செஞ் சரணமென்றும்
போற்றுஞ் சுருதிப் பொறிவண் டினுக்கந்தண் பூவிரியே.

---

29. அலகு அற்ற - அளவற்ற. கல்வி கொண்டு - கல்வியினால். ஏது ஆம் - என்ன பயன் உண்டாகும்; "கற்றதனா லாய பயனென்கொல் வாலறி வன், நற்றா ளொழாஅ ரெனின்" (குறள், 2.) மாது இருக்கும். மா திருக்கு - பெரிய குற்றமாகிய நோயை. தாளை நினைத்தல் மருந்தென்க.

30. மாற்றும் பிறவிப் பிணிக்கின் மருந்து: "மருந்துநம் மல்லற் பிறவிப்பிணிக்கு" (திருச்சிற். 148.) சுருதியாகிய பொறிவண்டு; சுருதி - வேதம்.

# வலிவல மும்மணிக் கோவை

## செய்யுள் முதற் குறிப்பகராதி

[எண்: பக்க எண்]


| | | |
|---|---|---|
| அடித்தலம் | ... | 8 |
| அருளுமடக்கமும் | ... | 23 |
| அன்றெனி | ... | 31 |
| இலைத் தொழிற் | ... | 13 |
| இன்று சென்ற | ... | 4 |
| உடையார் | ... | 7 |
| எய்தவைங்கணை | ... | 4 |
| எழுதாக்கிளவி | ... | 6 |
| ஓயாப்பிறவி | ... | 32 |
| கடந்தான் | ... | 27 |
| கடமான் | ... | 19 |
| கூட்டுவது | ... | 27 |
| சிந்தையுஞ் | ... | 28 |
| தாமேதமக்கு | ... | 20 |
| தேருத | .... | 8 |
| தேனலர் கொன்றைத | ... | 23 |
| நிற்பன | ... | 13 |
| பலகற்று | ... | 34 |
| பற்றுகண்டாய் | ... | 32 |
| பூவிரிகமல | ... | 1 |
| மற்றுருதவி | ... | 31 |
| மறைநெடு | ... | 20 |
| மாமாது | ... | 1 |
| மாற்றும்பிறவிப் | ... | 34 |
| முயன்மறுத் | ... | 32 |
| மேலைத்தவ | ... | 13 |
| யானேயடிமை | ... | 23 |
| வந்தது மாலை | ... | 6 |
| வாழ்வாய் | ... | 4 |
| வேண்டீர் | ... | 31 |
| வேயெனப் | ... | 6 |

# அரும்பத அகராதி

—(o)—

அகநாடு - மருத நிலம்
அங்காந்து - வாய் திறந்து
அங்கி - அக்கினி
அசும்பு - துளி
அஞர் - துன்பம்
அட்டு - சமைத்து
அடகு - இலை
அணர் - கழுத்து
அணியல் - மாலை
அதள் - தோல்
அநங்கன் - காமன்
அயர்த்தல் - மறத்தல்
அயிர் - கற்கண்டு
அயில் - அம்பு
அரங்கு - நடனசாலை
அரணம் - பாதுகாப்பு
அரம்பை - வாழை
அரமியம் - நிலாமுற்றம்
அரி - அரிசி
அருக்கர் - சூரியர்
அரை - தண்டு
அலந்து - ஏமாந்து
அலம் - கலப்பை
அலம்பி - ஒலித்து
அலமந்து - சுழன்று
அலர் - பழிமொழி
அவுணன் - அசுரன்
அழிபசி - மிக்க பசி
அழுங்குதல் - துன்புறல்
அள்ளல் - சேறு
அள்ளூறி - மிக்கு ஊறி
அளறு - சேறு
அளி - அன்பு
அறல் - கருமணல்
அறை - துண்டு
அறை போதல் - இல்லையாதல்
ஆடகம் - பொன்
ஆம்பல் - யானை
ஆயம் - ஆதாயம்
ஆலம் - விடம்
ஆழி - சக்கரம்
ஆறலை - வழிப்பறி
ஆனாது - அமையாமல்
இக்கு - கரும்பு
இடக்கர் - மறைப்பதற்குரியது
இடத்தல் - தோண்டுதல்
இடுகு - சிறுகிய
இடையாது - தளராமல்
இதழி - கொன்றை
இந்தியம் - பொறிகள்
இரங்க - ஒலிக்க
இலம்பாடு - வறுமை
இவர்தரும் - பரக்கும்
இழுது - நெய்
இறும்பூது - ஆச்சரியம்
இன்னுங்கு - துன்பம்
இனைதல் - துன்புறல்
இனைபு - வருத்தம்
ஈளை - கோழை
உகளம் - இரண்டு
உகிர் - நகம்
உடு - நட்சத்திரம்
உபயம் - இரண்டு
உரகம் - நாகம்
உரவு - வலிமை
உராஅய் - அலைந்து
உரி - தோல்
உரிஞ்ச - உராய
உலவா - அழியாத
உலைவது - அலைதல்

உவட்டு - பெருக்கு
உழக்கி - கலக்கி
உளை - பிடரி மயிர்
உற்பலம் - கருங்குவளை
உறைக்கும் - துளிக்கும்
உன்மத்தர் - பித்தர்
ஊழி - யுகம்
ஊன் - உடம்பு
ஏக்கற்று - ஏமாந்து
ஏது - காரணம்
ஏனம் - பன்றி
ஒடியா - தவிராத
ஒல்க - மெலிய
ஒல்லுவது - இயல்வது
ஒலித்து - வெளுத்து
ஒற்ற - அடிக்க
ஓச்சி - தூக்கி
ஓதி - கூந்தல்
ககனம் - வானம்
கங்கணம் - காப்பு
கடமான் - யானை
கடவ - உரிய
கடவல் - வீசுதல்
கடித்தலம் - இடை
கண்டிகை - உருத்திராட்சம்
கண்ணுதல் - எண்ணுதல்
கண்ணுறை - மேலீடு
கணிச்சி - மழு
கத்திகை - மாலை
கதலி - வாழை
கதிர்மண்டிலம் - சூரியர்
கந்துள் - கரிக்கட்டி
கம்பம் - அசைவு
கரவு - வஞ்சகம்
கவ்வை - குற்றம்
கவரா - விரும்பி
கவைஇ - வளைந்து
கழகம் - சூதாடுமிடம்
கழி - மிகுதி
கழை - கரும்பு, குத்துக்கோல்
களதபுதம் - வெள்ளி
களமர் - உழவர்
கவறு - பாச்சிகை
கற்பம் - யுகம்
கறங்கு - காற்றாடி
கறி - மிளகு
கறுத்து - கோபித்து
கறை - கறுப்பு
காஞ்சனம் - பொன்
காட்சி - ஞானம்
காம்பு - கைப்பிடி
காயம் - கறிக்குச்சேர்க்கும் வாசனைப் பொருள்
காயாமல் - துன்புறுத்தாமல்
கால் - காற்று, சக்கரம், துணி, முறை
காவி - சுமந்து
காளம் - நஞ்சு
கிடங்கு - அகழி
கிடுகு - பலகை
குடுமி - சிகரம்
குண்டு - பள்ளம்
குதுகுதுப்பு - நடுக்கம்
குய் - தாளிப்பு
குயவரி - புலி
குரங்குபு - வளைந்து
குவடு - மலை
கூட்டுண - கொள்ளையிட
கூவல் - கிணறு
கூவிளம் - வில்வம்
கெழீஇ - பொருந்தி
கேதம் - துன்பம்
கைதவம் - வஞ்சனை
கைதூவாது - ஒழியாமல்
கையர் - கீழ்மக்கள்
கோக்கு - கொக்கிறகம்பூ
கொடிறு - குறடு
கொடும்புறம் - வளைந்தமுதுகு
கொந்து - கொத்து
கொற்றம் - வெற்றி
கொன் - பெருமை
கோட்டுதல் - வளைத்தல்
கோடல் - வளைதல்
கோடு - கரை
சகடம் - வண்டி
சதி - தாள ஒற்று
சந்தி - மூட்டு
சந்து - தூது

சாயல் - மென்மை
சிதவல் - கந்தை
சிமிழ்த்த - கட்டிய
சிரகம் - கமண்டலம்
சூடிகை - உச்சி
சுரபி - காமதேனு
சுரும்பு - வண்டு
சுளி - கோபிக்கும்
சுறவேறு - முதலை
சூல் - கருப்பம்
சூழ்வாய் - வலம் செய்வா
யாக
செச்சை - வெட்சி
செய்தி - செயல்
செருக்கிய - மிகுத்த
சேதகம் - சேறு
சேய் - பிள்ளை, முருகக்கடவுள்
சேறல் - செல்லுதல்
சொற்பனம் - கனவு
சோபானம் - படி
சோரி - இரத்தம்
ஞமலி - நாய்
ஞாளி - நாய்
தஞ்சு - தஞ்சம்
தந்திரம் - ஆகமம்
தப்புதல் - கொல்லுதல்
தமனியம் - பொன்
தமிழ் - இனிமை
தலைஇய - பெய்துவிட்ட
தலைத்தாள் - சமுகம்
தவிசு - ஆதனம்
தனு - வில்
தனையை - மகள்
தாதகி - ஆத்திப்பூ
தாரை - கூர்மை
தாவா - கெடாத
தாறு - குலை
திடம் - திண்மை
திருக்கு - மயக்கம்
திரை - தோல்சுருங்குதல்
திறை - கப்பம்
துடக்கு - சங்கிலி
துடி - சிறியகால அளவு
துணர் - பூங்கொத்து
துப்பு - வன்மை
துருவி - ஆராய்ந்து
துவன்றி - நெருங்கி
துளங்குபு - அசைந்து
தூர்த்தர் - பரத்தையை நுகரும்
காமுகர்
தெரியல் - மாலை
தெருளா - தெளியாத
தெறல் - துன்புறுத்தல்
தேறு - தேற்றாங்கொட்டை
தொடையல் - மாலை
தொண்டை - கோவைப்பழம்
தொலைச்சிய - நீக்கிய
தோரி - அரிசி
நடர் - நாடகமாடுவோர்
நல்குரவு - வறுமை
நலன் - அழகு
நவ்வி - மான்
நாடகம் - நடனம்
நாந்தகம் - வாள்
நாமம் - அச்சம்
நாய் - சூதாட்டத்திற்குரிய காய்
நாவாய் - கப்பல்
நிகளம் - விலங்கு
நிச்சம - தினமும்
நிபுடம் - நெருக்கம்
நிரப்பு - வறுமை
நிரயம் - நரகம்
நிறை - நிறுத்தற்றன்மை
நுசுப்பு - இடை
நுனித்த - ஆராய்ந்த
நொடுத்து - விற்று
நோன்றாள் - வலிமையுடைய
திருவடி
பகர்ந்து - விற்று
பங்கம் - சேறு
பட்டிமை - வஞ்சனை
படர் - தூதர்
படுத்தி - அடக்கி
பண் - பதம்
பணம் - படம்
பணிலம் - சங்கு
பணைத்த - பெருத்த
பணைத்து - பிழைத்து

பந்தி - வரிசை
பரசு - மழுவாயுதம்
பரிசு - தன்மை
பருவரல் - துன்பம்
பல்லவம் - தளிர்
பழனம் - வயல்
பழிச்சி - வாழ்த்தி
பனசம் - பலா
பாடகம் - ஒருவகைக் காலணி
பாந்தள் - பாம்பு
பார்ப்பு - குஞ்சு
பாரிசம் - பக்கம்
பால் - பக்கம், பகுதி
பாவனுதீதம் - சிந்தனைக்கு எட்டாதது
பாழி - வலிமை
பானுட் கங்குல் - நடு இரவு
பிடர் - கழுத்து
பிணையல் - மாலை
பிரசம் - தேனடை
பீழை - துன்பம்
புடவி - பூமி
புரிசை - மதில்
புலம்பு - வருத்தம்
புலோமசை - இந்திராணி
புழுக்கல் - சோறு
புளினன் - வேடன்
புற்கை - புல்லரிசிக் கூழ்
புன்கண் - துன்பம்
பூவிரி - மலர்ந்த மலர்
போகுட்டு - கொட்டை
பொதுளிய - நெருங்கிய
பொரியல் - பொரிக்கறி
பொரு - ஒப்பு
பொறி - அறிவு, இந்திரியம், சுவடு, புள்ளி
பொறிப்ப - தெறிக்க
பௌவம் - கடல்
மசகம் - கொசு
மடங்கல் - சிங்கம்
மண்டிலம் - வட்டம்
மத்தகம் - நெற்றி
மத்தம் - ஊமத்தை
மதவரை - யானை
மதாணி - பதக்கம்
மதிமுகிழ் - பிறை
மயிலை - மீன்
மருங்கு - அருகு, இடை
மருத்துவர் - அசுவினிதேவர்கள்
மல்லல் - வளம்
மறலி - யமன்
மறி - ஆடு
மறு - களங்கம்
மன்றல் - வாசனை
மா - திருமகள்
மாக்கள் - அறிவில்லாதவர்
மாதுலன் - மாமன்
மாலை - தன்மை
மாழை - மாவடு, ஒருவகைமான்
மிச்சில் - எச்சில்
மிலைச்சி - சூடி
மீளி - வன்மை
முண்டம் - நெற்றி
முரண் - வன்மை
முரிப்ப - வளைக்க
முறி - துண்டு
முனைதல் - வெறுத்தல்
மூகை - ஊமைத் தன்மை
மூர்த்தம் - உருவம்
மூரல் - நகை
மையாட்டு - வித்தியார்ப்பியாசம்
மோக்குள் - குமிழி
யாதனை - துன்பம்
யாளி - சிங்கம்
யுகம் - இரண்டு
ராசி - கூட்டம்
வசி - சூலம்
வட்டு - உருண்டை
வடித்தல் - தெரிந்து கூறுதல்
வண்ணம் - தன்மை, நிறம், சாதி
வணர் - வளைவு
வம்பலர் - வழிநடப்போர்
வம்பு - வாசனை
வரி - கோடு
வரை - அளவு
வல்லி - கொடி, விலங்கு
வலம் - வெற்றி
வளை - சங்கு

வன்கண் - கொடுமை
வாகை - நெற்றி
வாமம் - அழகு
வாயதம் - காக்கை
வாரணம் - கோழி
வாரிசம் - தாமரை
வாவல் - வௌவால்
வாள் - ஒளி
விடர் - காமுகர்
விரவலர் - பகைவர்
விரிஞ்சன் - பிரமதேவர்
விழுமம் - துன்பம்
வீதல் - இறத்தல்
வீயாது - நீங்காமல்
வீழி - வீழியென்னும் பழம்
வீறு - வேறு
வேண்டலை - கபாலம்
வெள்ளடை - தாம்பூலம்
வெளில் - கட்டுத்தறி
வெறுக்கை - செல்வம்

---

PRINTED AT THE MADRAS LAW JOURNAL PRESS, MYLAPORE, MADRAS.

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி

# டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் பதிப்பு நூல்கள்

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| பத்துப்பாட்டு மூலம் | .. | 1 | 0 |
| புத்த சரித்திரம் | .. | 0 | 12 |
| மணிமேகலைக்கதைச்சுருக்கம் | .. | 0 | 10 |
| உதயணன் சரித்திரச்சுருக்கம் | .. | 1 | 4 |
| திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்—முதற்பாகம் | .. | 2 | 0 |
| ௸ —இரண்டாம் பாகம் | .. | 2 | 0 |
| பாசவதைப்பரணி (குறிப்புரையுடன்) | .. | 0 | 12 |
| திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம் | .. | 0 | 4 |
| திருக்காளத்தி நாதருலா | .. | 0 | 5 |
| திருப்பூவண நாதருலா | .. | 0 | 5 |
| தேவையுலா | .. | 0 | 4 |
| மதுரைச் சொக்கநாதருலா | .. | 0 | 6 |
| கடம்பர் கோயிலுலா | .. | 0 | 6 |
| சங்கரநயினார் கோயிலுலா | .. | 0 | 5 |
| மதுரைச்சொக்கநாதர் தமிழ்விடு தூது | .. | 0 | 5 |
| கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டுவிடு தூது | .. | 0 | 8 |
| பத்மகிரிநாதர் தென்றல்விடு தூது | .. | 0 | 4 |
| திருவாவடுதுறைக்கோவை | .. | 0 | 10 |
| சொக்கநாதர் மும்மணிக்கோவை | .. | 0 | 5 |
| திருமயிலைத்திரிபந்தாதி | .. | 0 | 5 |
| சங்கரநயினார் கோயிலந்தாதி | .. | 0 | 6 |
| பழனிப் பிள்ளைத்தமிழ் | .. | 0 | 3 |
| சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள் (கோடீச்சுரக் கோவை, தஞ்சைப் பெருவுடையாருலா, சரபேந்திரபூபால குறவஞ்சி நாடகம்) | .. | 2 | 8 |
| தியாகராச லீலை | .. | 0 | 12 |

கிடைக்குமிடம்:

தியாகராஜ விலாஸம்,
திருவேட்டீசுவரன்பேட்டை,
திருவல்லிக்கேணி, சென்னை.